# சூரசங்காரம்



ஆக்கம்: மட்டுவில் ஆ. நடராசா

உ

சிவமயம்



மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

நூலின் பெயர் : சூரசங்காரம்

நூலாசிரியர் : மட்டுவில் ஆ. நடராசா

பிரதிகள் : 1000

முதற்பதிப்பு : 2001-11-14

பதிப்புரிமை : நூலாசிரியருக்கே.

விலை : 70/=

அச்சுப்பதிப்பு : லக்ஷ்மி அச்சகம்
195, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு-13,
இலங்கை.

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு
மற்றும் வடக்கு, கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சுச் செயலாளர்
**வே. இரகுநாதன் அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துரை

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணக் கலாசாரம், கந்தபுராணக் கலாசாரம் என்று சொல்லுவர். ஆறுமுகநாவலர் அவர்கள் காலத்தில் இலங்கையில் சைவம் மிகவும் நலிந்த நிலையில் இருந்தது. இதனை மீண்டும் கட்டியெழுப்ப அவர் பெரிதும் உதவினார். கோவில்களில் புராண படனம் சமயப் பிரசங்கங்கள் நடாத்தப்பட வேண்டும் என்று அறிவு றுத்தியதுடன் தானே இதனைப் பல கோயில்களில் நடாத்திக் காட்டினார். இதனால்தான் கந்தபுராணம் இன்னும் எம்மிடையே மறையாமல் இருக்கிறது.

கந்தபுராணத்தை மட்டுமல்ல சைவநூல்கள் பலவற்றையும் துறைபோகக் கற்ற மட்டுவில் ஆ. நடராசா அவர்கள் இந்நூலில் கந்தபுராணப் பாடல்கள் பலவற்றையும் இடையிடையே எடுத்துக் காட்டி சூரசங்காரத்தினையும் அதன் தத்துவத்தையும் விரிவாக எழுதியுள்ளார். கந்தபுராணப் பாக்களை நாமாகவே படிக்கும்போது அதன் ஆழ்ந்த தத்துவங்கள் விளங்குவது அரிது. இந்நூலில் சூரசங்காரத்திற்குத் தத்துவ ரீதியாக விளக்கம் கொடுத்துள்ளார். இவர் கந்தபுராணச் சிந்தனைகள் என்னும் புத்தகத்தைச் சில வருடங்களுக:கு முன்னர் வெளியிட்டுள்ளார். இக்காலத்தில் இவ்வாறு கந்தபுராணத்தை நன்கு பயின்று மற்றவர்களுக்கு விளக்கக்கூடிய வர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர். இந்நூலை முருக பக்தர் கள் வாங்கிப் படித்து முருகனின் அருளைப் பெறுவார்களாக. ஆசிரியர் அவர்களும் மேலும் இதுபோன்ற பல அரிய நூல்களை எழுதி சைவ உலகிற்கு அளிக்கவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

**வே. இரகுநாதன்** B.Sc.(Eng.) Hons.
Postgrad.Dip.Hydraulics (Delft), FIE (SL)
நான்காம் மாடி, இல.14, ஸ்ரீமத் பாரொன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு-01.

உ

சிவமயம்

# முகவுரை

சிவாலயங்களிலும் கந்தசுவாமி கோயில்களிலும் கந்தபுராணம் படித்துப் பயன் சொல்வது வழக்கம். அதனால் எழுத வாசிக்கத் தெரியாதவர்களும் புராணம் படிப்பதைக் கேட்பதன் மூலம் சைவசமய அறிவுள்ளவர்களாக வாழ்ந்தனர்; கந்தபுராண கலாசாரம் வேரூன்றியது. அதுகாரணமாக அந்நியர் ஆட்சிக்காலத்திலும் எமது மதம் அழிந்து போகாமல் நிமிர்ந்து நின்றது.

இன்று புராணம் படிக்கும் வழக்கம் ஒழிந்து போகின்ற போதிலும் கந்தசட்டி விரத காலத்தில், சூரபன்மன் வதைப் படலத்தைப் படித்துப் பயன் சொல்லும் வழக்கம் முற்றாக அற்றுப் போகவில்லை.

புராணம் படிக்கும்போது,

"வல்ல தேசிக னுக்கு மணித்தவி
சொல்லை நல்கி உறுபொரு ளீந்துநன்
றல்ல வாணி கிளத்த லடக்கிவன்
புல்ல ரானவ ரைப்புறம் போக்கியே" படிக்கவேண்டுமென்கின்றது பிரமோத்தரகாண்டம். நன்றல்ல வாணி கிளத்தல் - வீண் பேச்சுப் பேசுதல். இன்று புராணம் படிப்பதைக் கேட்பதற்கு எவருமே இல்லாதபோது யாரைப் புறம்போக்குவது?

இன்றைய சூழ்நிலையில், புராணங்களை ஆலயங்களுக்கு வெளியே கொண்டு வந்து, அவற்றைப் புல்லரல்லாத ஒரு சிலரிடமாவது சென்றடையச் செய்ய வேண்டி யிருக்கிறது.

சூரபன்மன் வதைப்படலம் 507 பாடல்களைக் கொண்டது. இதைப்படிப்போர் சூரசங்காரம் நிகழ்வதற்கான காரணத்தைக் கந்தபுராணக் கதைமூலம் அறிந்தாலன்றி இப்படலத்தைப் பற்றிய முழுமையான அறிவைப் பெறமுடியாது. இவற்றைப் படிப்பதற்குரிய நூல்களும் நேரமும் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இக்குறையை இயன்றவரை இல்லாமற் செய்வதற்கு எழுதப்படுகின்றது இந்நூல்.

இதில் சூரசங்காரந் தொடர்பாக அவசியம் அறியவேண்டிய விடயங்கள் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. சூரபன்மன் வதைப்படலம் முழுவதும் கதைத் தொடர்பு அற்றுப்போகாமல் தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது.

போர் நடக்கும்போது தேவர்களுக்கு அடிக்கடி அச்சமும் ஆனந்தமும் மாறி மாறி உண்டானது. தேவர்கள் அஞ்சியபோது, முருகப்பெருமான் இத்தன்மையர், அவர் உங்களைக் காப்பாரெனக் கூறித் திருமால் அவர்களைத் தேற்றிய இரண்டு சந்தர்ப்பங்கள் உண்டு. அப்பகுதிகள் கருத்தூன்றிப் படிக்கவேண்டியவை.

போர் நடந்தபோது எவரும் யுத்ததருமத்தை மீறியதாகக் கந்தபுராணம் கூறவில்லை. சூரபன்மனிடம் யானை, குதிரை, தேர், காலான் என்னும் நால்வகைப் படைகளும் இருந்தன. முருகப் பெருமானிடம் காலாட்படை மாத்திரமே இருந்தது. நால்வகைப் படையும் இல்லாதவனை நால்வகைப் படையுங் கொண்டு தாக்குவது தருமமாகாது என்ற கருத்தினாற் போலும் சூரபன்மனுடைய நாற்படையும் முருகப்பெருமானது படையோடு போரிட்டதாகச் சூரபன்மன் வதைபடலத்தில் எவ்விடத்திலும் கூறப்படவில்லை. வீரவாகு தேவரைக் கொல்லக் கூடிய சந்தர்ப்பங் கிடைத்த போதிலும் தூதாக வந்தவனைக் கொல்வது தகாதெனக் கருதி. சூரபன்மன் அவரைக் கொல்லாது விட்டான்.

பறவை யாக்கையோடு இருப்பவனோடு தேரிற் சென்று போரிடுவது தவறென்ற கருத்தினால், முருகப்பெருமான் மயிலாகிய இந்திரன் மீதேறிச் சென்று போரிட்டார்.

மாயப்போர் புரிவது அசுரரைப் பொறுத்த வரையில் யுத்த தருமத்தை மீறிய செயலாகாது போலும். மாயப்போர் புரிந்ததன் மூலம் சூரபன்மன் யுத்த தருமத்தை மீறினானென்று கந்தபுராணத்தில் எவ்விடத்திலுங் குறிப்பிடப்படவில்லை. இவையெல்லாம் அறிஞர்களது சிந்தனைக் குரியன.

கற்போர் நயத்தற்குரிய சில பகுதிகள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. உதாரணத்துக்கு, வேற்படையோன் தடிந்தது காண்கிலர், தாரணி மேல் கிடந்தது கண்டனர், வெஞ்சர மாரி பின்னுற முந்து பெயர்ந்திடு மென்றால் அன்னவன் தேர்விரை வார் கணிக்கின்றார், வீரமடமாது..... இவர் தமக்குள் ஆரிடை நடத்துமென ஐயமொடு நின்றாள், வானிமிர் செம்புனல் மா கடலொக்கும் என்னும் பாடற் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

எந்தத் தமிழிலக்கியத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் கந்தபுராணக் கவிநயம் அதற்குக் குறைந்ததாக மாட்டாது; ஆனாலுங் கந்தபுராணத்திற் பக்திச் சுவை விஞ்சி நிற்குங் காரணத்தால் இலக்கியச் சுவை முதன்மை பெறுவதில்லை. இந்நூலிற் பக்திச் சுவை சொட்டுஞ் சில பாடல்களும் இடம்பெறுகின்றன.

கந்தபுராணக் கருவூலத்துள் சைவசித்தாந்தக் கருத்துக்களாகிய முத்துக்கள் புதைந்து கிடக்கின்றன. அவற்றுட் சில வெளிப்படையாகத் தோன்றுகின்றன; சில மறைபொருளாகக் காணப்படுகின்றன. அவற்றுள், திரோதான சத்தி ஆன்மாக்களுக்கு உபகரிக்கும் முறை, இறைவனது திருவுருவத்திற் பொருந்திய அங்கங்கள், புரியட்டக சரீரம், சத்திநிபாதம், ஆகாமிய வினை முதலியன பற்றி இந்நூலிற் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்நூலை எழுதுவதற்காகக் கந்தபுராணத்தைப் புரட்டிப் பார்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது. எழுத்துப் பிழையற்ற கந்தபுராணப் பதிப்பு ஏதாவது கிடைக்குமா வென்று தேடிப் பார்த்தேன். எனது முயற்சி அரிசிக்குள் இருக்குங் கல்லைத் தேடாமல் கல்லுக்குள் ளிருக்கும் அரிசியைத் தேடுவது போலிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் இந்நூலை எழுதவேண்டுமென்னு மெண்ணம் எனக்கு எவ்வாறேற்பட்ட தென்பது புரியாத புதிராகவே இருக்கிறது. எது எப்படியானாலும் இந்நூலை எழுதத் தொடங்கினேன். எழுதும் வேலை எதிர் பாராத விதமாக விரைவில் முடிந்தது. எனக்குக் கிடைத்த கந்தபுராணப் பதிப்புகள் இந்நூலிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அவ்வாறான தவறுகள் ஏதாவதி ருந்தால் தவறு செய்த என்னை மன்னிப்பதுடன் அறிஞர்கள் அத்தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டுமெனவும் விரும்புகிறேன்.

இந்நூலை கந்தசட்டி விரதந் தொடங்குவதற்கு முன்னர் அதுமுடியாவிட்டால் விரதகாலத்திலாவது வெளியிட வேண்டுமென விரும்பினேன். அவ்வெண்ணம் நிறைவேறி யிருக்கிறது. அதை நிறைவேற்றித் தந்தவர்கள் லக்ஷ்மி அச்சகத்தார். அவர்கள் எவ்வளவோ வேலைப் பழுவுக்கிடையிலும் விரைவாகவும் அழகாகவும் இந்நூலை அச்சிட்டுத் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றி உரித்தாகுக.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு, கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின், செயலாளர் திரு. வே. இரகுநாதன் அவர்களுக்கு எனது நன்றி.

**ஆ. நடராசா**

இல. 25-1/2,
ஈ.எஸ். பேனான்டோ மாவத்தை, 25-1/2, E.S. Fernando Mawatha,
கொழும்பு-06. Colombo-06.

உ

சிவமயம்

# சூரசங்காரம்

சூரசங்காரம் முடிந்தது. இந்திரனுடைய மகன் சயந்தன் விண்ணுலகை ஆட்சி புரிந்தான். அவனுக்குப் பக்கத்தில் முனிவர்களுந் தேவர்களும் இருந்தார்கள். சயந்தனுக்கு முன்பக்கத்தில் தேவகுருவாகிய வியாழபகவான் வீற்றிருந்தார். சயந்தன் வியாழபகவானை நோக்கி "ஐயனே, பிரமா முதலாகவுள்ள தேவர்களாகிய நாங்களும் அளப்பரிய தவஞ்செய்த முனிவர்களும், சூரபன்மன் துன்புறுத்தத் துயருழந்து இழிநிலை அடைந்ததற்குக் காரணமென்ன?" என்று கேட்டான்.

"திரிபுர சங்காரஞ் செய்த சிவனையன்றித் திருமாலை வேள்வித் தலைவராகக் கொண்டு தக்கன் ஒரு யாகஞ் செய்தான். அந்த யாகத்துக்குச் சென்றதே தேவர்களுக்கும் மேன்மை பொருந்திய முனிவர்களுக்குந் தீங்கு விளையக் காரணம்" என்று விடை கூறினார் வியாழன்.

"விண்ணவ ராயி னோர்க்கும் மேதகு முனிவர் யார்க்கும்
எண்ணமில் சூரன் தன்னால் எய்திய தீமை யெல்லாம்
நண்ணலர் புரமூன் றட்ட நாதனை யன்றித் தக்கன்
பண்ணிய மகத்திற் புக்க பாவத்தால் விளைந்த தென்றான்"

என்கின்றது கந்தபுராணம் (தேவகாண்டம்).

'தக்க யாகத்துக்குச் சென்றதே தேவர்கள் சூரனாற் றுன்புறக் காரணமாகுமானால், அந்த யாகம் எவ்வளவு பெரும் பாவகாரியமாய் இருத்தல் வேண்டும்! அந்தப் பாவகாரியத்தைச் செய்த தக்கன் எத்துணை இழிதொழிலாளனா யிருத்தல் வேண்டும்!' என்றெண்ணினான் சயந்தன்.

"............... அந்தப்
புன்றொழிற் றக்கன் வாழ்க்கை புரமெரி படுத்த தேவை
அன்றியே செய்த வேள்வி ஆயிடை நிகழ்ச்சி யாவும்
ஒன்றற உரைத்தல் வேண்டும் சிறியனேன் உணர்தற்கு" என்றான்.

## தக்க யாகம்

சயந்தனின் இந்த வினாவுக்கு வியாழபகவான் விடை கூறுவதாக அமைந்திருக்கிறது கந்தபுராணத்தை நிறைவு செய்யும் பகுதியாகவுள்ள தக்ககாண்டம். தக்ககாண்டமே கந்தபுராணத்தின் உயிர்நிலை யென்று கூறினால் அது மிகையாகாது.

பிரமதேவரின் மகன் தக்கன். அவன் தன் தவவலிமையால் உலக மாதாவாகிய உமையம்மையை மகளாகப் பெற்றான். உமைக்குஞ் சிவ னுக்கும் பங்குனி உத்தர நன்னாளில் திருக்கல்யாணம் நடந்தது. மணச்சடங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மணமகனாகிய இறைவன் மறைந்தருளினார். சிவபெருமான் மறைந்ததற்குக் காரணம் தனது தவக் குறைவே எனக்கருதி மேலுந் தவஞ்செய்தார் உமையம்மை. சிவபெருமான் தன்னை மானபங்கப் படுத்திவிட்டா ரெனக் கருதிய தக்கன் சிவன் மீது சினங்கொண்டான்.

சிவபெருமான் இடபாரூடராய் எழுந்தருளி வந்து உமையம்மையைத் திருக்கைலாயத்துக்கு அழைத்துச் சென்றார். தனது பாட்டனாகிய திருமா லும் தந்தையாகிய பிரமனும் பணிகேட்க அரசியற்றிய தக்கன் ஒருமுறை, தன் மகளெனக் கருதிய உமையம்மையையும் மருகனென்றெண்ணிய சிவபெருமானையுங் காண்பதற்குத் திருக்கைலாயஞ் சென்றான். அவனைச் செம்பொற் றிருக்கோயிலுட் செல்ல நந்தியெம்பெருமான் அனுமதிக்கவில்லை. அதனாற் சினங்கொண்ட தக்கன் தன்னை அவமதித்த சிவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டுமென் றெண்ணி, சிவனுக்கு முதன்மை கொடுக்காமல், திருமாலை வேள்வித் தலைவராகக் கொண்டு ஒரு யாகஞ் செய்தான். பிரமா முதலிய தேவர்களும் சில முனிவர்களும் பல பிராமணர்களும் அந்த யாகத்துக்குச் சென்றிருந்தார்கள்.

வீரபத்திரக் கடவுள் யாகசங்காரஞ் செய்தார். பிரமா வீரபத்திரக்கடவுளை வணங்கி அனைவருக்கும் அநுக்கிரகஞ் செய்யும்படி வேண்டினார். வீரபத்திரரின் அநுக்கிரகத்தால் இறந்தவர்கள் உயிர்பெற்றெழுந்தனர். வீரபத்திரரால் தலையறுக்கப்பட்ட தக்கன் தலையில்லாமலே எழுந்து நின்றான். தக்கனின் மனைவி தனக்கு மாங்கல்யப் பிச்சை அளிக்கும்படி வீரபத்திரக் கடவுளை வேண்டினாள். வீரபத்திரர் அறுபட்டுக் கிடந்ததொரு ஆட்டுத் தலையைத் தக்கனின் உடலிற் பொருத்தி அருள்புரிந்தார்.

பிரமதேவர் தக்கனுக்கு உபதேசஞ் செய்தார். அதனால் அவனுக்கு மயக்கம் நீங்கியது; தெளிவு பிறந்தது. அவன் ஆயிரம் ஆண்டுகாலம்



சிவபூசையாகிய தவத்தைச் செய்து சிவனருளால் சிவகணநாத பதவியைப் பெற்றான். தேவர்கள் நூற்றெட்டு யுக காலம் அசுரருக்கு அடிமை செய்து அலுத்தார்கள். துன்பத்தைப் பொறுக்கமுடியாத தேவர்கள் சிவபெருமா னுக்குத் தமது குறையை முறையிட்டார்கள். சிவனருளால் முருகப்பெருமான் சூரசங்காரஞ் செய்து தேவர்களுக்கு விண்ணுலக அரசை வழங்கினார்.

தக்க யாகத்திற் பங்குபற்றித் தானம் பெற்று வயிறார உண்ட பிராமணருக்குப் பாவ விமோசனம் கிடைத்ததா என்பது பற்றிக் கந்தபுராணத்தில் எதுவுமே கூறப்படவில்லை.

"மேதக்க தக்கன் மகந்தன்னில் விரைந்து புக்காங்
கேதத் தடிசில் மிசைந்தேபொருள் யாவு மேற்றுப்
பூதத்தரின் மாய்ந் தெழுந்தேதம் புரிகள் தோறும்
பேதைத் தொழில் அந்தணர் யாரும் பெயர்ந்து போனார்"

என்ற செய்தியை மாத்திரங் கூறுகின்றது கந்தபுராணம் (தக்கன் சிவபூசை செய்படலம்).

ஏதம் - குற்றம், அடிசில் - உணவு, மிசைந்து - உண்டு.

## சூரன் வரம் பெற்றான்

அசுரேந்திரனது மகள் மாயை. அவள், இழந்த தன்குலப் பெருமையை மீளப் பெறவிரும்பி, தமது குலகுருவாகிய சுக்கிராச்சாரியாரின் அறிவுரைப்படி காசிப முனிவரைக் கூடி, சூரன், சிங்கன், தாரகன் என்னும் புத்திரர்களையும் அசமுகி என்னும் புத்திரியையும் வேறு பல பிள்ளைகளையும் பெற்றெடுத்தாள்.

சூரன், சிங்கன், தாரகன் என்னுந் தன் பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கத் தொடங்கிய காசிப முனிவர் அவர்களை நோக்கி "தவமதன்றியே ஏதுளதொரு செயல் இயற்றத் தக்கதே" என்றுகூறி அவர்களைத் தவஞ் செய்யத் தூண்டினார்.

இதைக்கேட்ட தாயாகிய மாயை சிரித்தாள். அவள் முனிவரை நோக்கி, "முனிவரே, நீர் சொல்வது சரி. ஆனாலும் முத்தியடைய விரும்பும் முனிவர்களுக்கே உமது உபதேசந் தகும். எனது பிள்ளைகள் அளவிலா ஆற்றலையும் செல்வத்தையும் புகழையும் அசுரகுலத் தலைமையையும் பெறவேண்டும்" என்று கூறினாள்.

பின்பு தன் மக்களை நோக்கிய மாயை, "பிள்ளைகளே, நீங்கள் பெருஞ்செல்வத்தைப் பெறுவதற்காக வேள்வி செய்யுங்கள்" என்று கூறி

அவர்களை யாகஞ் செய்ய அனுப்பினாள். யாகஞ் செய்யச் சென்ற சூரபன்மனைச் சந்தித்த அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியார் அவனை வாழ்த்தி வழியனுப்பினார்.

சூரபன்மன் ஆலவனத்துக்குச் சென்று அங்கிருந்து பத்தாயிரம் ஆண்டு காலம் வீரவேள்வி செய்தான். சிவபெருமான் சூரபன்மனுக்குக் காட்சி கொடுத்தார்.

"நாரிபாகமும் இமையா முக்கண்ணும், திருப்புயங்கள் நான்கு மாகி
மூரிமால் விடைமேல்கொண் டெம்பெருமான், மேவுதலு முன்னி நோக்கி
பாரின் மீமிசை வீழ்ந்து, பணிந்தெழுந்து பலமுறையும் பரவிப் போற்றிச்
சூரன் ஆராத பெருமகிழ் - சிறந்து, துணைவரொடுந் தொழுது நின்றான்".

நாரி - பெண், விடை - இடபம்.

சிவபெருமான் சூரபன்மனுக்கு ஆயிரத்தெட் டண்டங்களை நூற்றெட்டு யுககாலம் ஆட்சிபுரிய வரமளித்து, அவனுக்குக் கொடுத்த எல்லா அண்டங்களுக்குஞ் சென்று வரக்கூடிய இந்திரஞாலத் தேரையுங் கொடுத்தருளினார்.

தனது ஆட்சிக்குட்பட்ட எல்லா அண்டங்களுக்குஞ் சென்று திரும்பிய சூரபன்மன் வீரமகேந்திரம் என்னும் நகரை அமைத்து அங்கிருந்து அரசியற்றினான். சூரனது ஆட்சியில் சுவர்க்க லோகந் தீக்கிரையாக்கப்பட்டது. இந்திரனும் இந்திராணியும் மறைந்து வாழ்ந்தனர். தேவர்கள் அசுரருக்கு அடிமை செய்து அலுத்தனர். இந்திரனுடைய குமாரனாகிய சயந்தன் சிறைவைக்கப்பட்டான்.

## கந்தக்கடவுள் போருக்குப் புறப்பட்டார்

தேவர்கள் சிவபெருமானைப் போற்றித் துதித்துத் தமது குறையை முறையிட்டனர். தேவர்களது குறையை நீக்கத் திருவுளங் கொண்ட சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணிலிருந்து கந்தக் கடவுளைத் தோற்றுவித்தார். பதினொரு உருத்திரரையும் அழைத்து அவர்களைத் தோமரம், கொடி, வாள், வச்சிரம், அம்பு, அங்குசம், மணி, தாமரைப்பூ, தண்டு, வில், மழு என்னும் பதினொரு படைகளாக்கி அவற்றையும் எப்படைக்கும் நாயகமாவதொரு வேலை ஆக்கி அதையும் கந்தக் கடவுளிடங் கொடுத்தார்.



அதன்பின் சிவபெருமான் இலக்கத்தொன்பது வீரரையும் மனோவேகப் பொற்றேரையுங் கொடுத்து, அவுணரை அழித்து, இந்திரனுக்கு விண்ணரசைக் கொடுத்து, வேதநெறியை நிலைபெறச் செய்யுமாறு கூற, குமாரக் கடவுள் இரண்டாயிரம் வெள்ளம் பூதர் புடைசூழத் தென்திசை நோக்கிச் சென்று சூரபன்மனது தம்பியாகிய தாரகனைக் கொன்று மாயை செய்ய வல்ல கிரவுஞ்ச கிரியை அழித்தபின் திருச்செந்தூருக்குச் சென்றார். அங்கிருந்து வீரவாகு தேவரைச் சூரபன்மனிடந் தூதாக அனுப்பினார். சூரனிடஞ் சென்ற வீரவாகு தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்கும்படி கேட்டார். சூரன் வீரவாகுதேவர் கூறியதை ஏற்க மறுத்தான்.

அதனால் முருகக்கடவுள் சூரபன்மனோடு போர்புரியப் புறப்பட்டார். போர் தொடங்கியது. போரில் அசுரேந்திரன், அதிசூரன், அக்கினி - முகாசுரன், பானுகோபன் முதலிய அரசிளங் குமரர் கொல்லப்பட்டனர். சூரனின் மகன் இரணியன் போர்க்களத்திலிருந்து மாயமாக மறைந்து சென்றான். சிங்கமுகாசுரன் இறந்தான். அவனது மறைவு குறித்து,

"பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னை யுளபொருளை யெல்லாம் பெறலாகும்
என்னை யுடைய இளையோனே இப்பிறப்பில்
உன்னை இனிப்பெறுவ துண்டோ உரையாயே"

என்று கூறிப் புலம்பிய சூரபன்மன் ஒருவாறு தன் மனத்தைத் தேற்றிக்கொண்டு போர் புரிய ஆயத்தமானான்.

## சூரன் போருக்குப் புறப்பட்டான்

சூரபன்மன் ஒற்றரை நோக்கி, தனது ஆட்சிக்குட்பட்ட அண்டந் தோறுஞ் சென்று அங்குள்ள சேனைகளை அழைத்து வரும்படி கட்டளை யிட்டான். அவனது ஆணைப்படி அவுணர் சேனை பேராரவாரத்தோடு திரண்டு வந்து மகேந்திரப் பெருநகரெங்கும் மொய்த்து இந்த அண்டகோள மெங்கும் நிறைந்தது. அதைக்கண்டு அஞ்சிய அமரர் எங்கே ஓடலாமென்று தெரியாமற் றிகைத்து நின்றனர். இந்திரன் மயங்கி விழுந்து இறந்தவன் போலானான். பிரமாவுந் திருமாலும் இனி என்ன நிகழுமோவென் றெண்ணி ஏங்கினார். தூதுவர் சூரனிடஞ் சென்று சேனைகள் வந்து சேர்ந்த செய்தி யைத் தெரிவித்தனர்.

சூரபன்மன் நன்றென்று கூறி, நீராடி, நீறணிந்து, அறுசுவை உண்டி உண்டு போர்க்கோலங் கொண்டு மகேந்திர புரியின் முதற்கடை வாயிலைச் சென்றடைந்தான். அரசனது வரவு கண்ட அசுரர் படை ஆர்த்தது. திரண்டு வந்த அசுரசேனையைத் தாங்க முடியாமற் றரணி அசைந்தது.

## அமரர் அஞ்சினர்

சூரபன்மன் போர்க்களத்துக்குச் சென்றான். முன்புறத்திற் சென்ற படையணி சிவகுமாரனுடைய பாசறையைச் சூழ்ந்தது. இடிமுழக்கம் போல ஆர்ப்பரிக்கும் அசுரர் படையைக் கண்ட அமரர் அஞ்சி அரற்றினர்.

திருமாலும் பிரமாவும் அட்டதிக்குப் பாலகரும் மூவிரு முகமுடைய முதல்வன் பாதம் பணிந்து,

"அந்தமிலாத வண்டம் ஆயிரத் தெட்டுத் தன்னில்
வந்திடு தானையோடு மாபெருஞ் சூரபன்மன்
உந்திய தேரின் மேலான் உறுசமர் புரிவான் போந்தான்
முந்திய தூசி நந்தம் பாசறை மொய்த்த தென்றார்."

தானை - சேனை, தூசி - முன்புறத்திற் செல்லும் படையணி.

அவர்களது கூற்றைக் கேட்ட முருகப் பெருமான் புன்முறுவல் புரிந்து, வாயுதேவனைப் பார்க்க, அவன் குறிப்பறிந்து, முட்கோலுங் கடிவாளமும் பிடித்துக் குதிரைகள் பூட்டிய மனோவேகப் பொற்றேரை முருகன் திருமுன் கொண்டு வந்தான். ஆறுமுகப் பெருமான் அத்தேரில் ஏறினார். வீரவாகு தேவரும் இலக்கத் தெண்மரும் எம்பெருமானைத் துதித்தவாறு அவருக்குப் பக்கமாகச் சென்றனர். இரண்டாயிரம் வெள்ளம் பூதசேனையும் முருகப் பெருமானைச் சூழ்ந்து சென்றது. பிரமா முதலிய தேவர்கள் பூத்தூவித் தொழுதவாறு சென்றனர். அப்போது முருகப்பெருமானுக்குப் பக்கத்தில் நின்ற பூதர்கள் பூமியிலும் எட்டுத் திசையிலும் வானிலும் நீக்கமின்றிச் சூழ்ந்து நின்ற சூரபன்மனது படையைப் பார்த்துப் பயந்தனர். அளவற்ற ஆற்றல் கொண்ட எமது பூதப் படைத்தலைவர்களும் இலக்கத்தொன்பது வீரரும் இவர்களை எதிர்த்து நின்று போர் புரியும் ஆற்றலுடைய ரல்லர். கல்லும் மரமுங் கொண்டு போர் புரியும் நாமோ இவர்களை வெல்ல வல்லோம்? இன்றைக்கே எமதுயிர் உடலை விட்டுப் பிரிந்துவிடும்போலும். அசுருடைய நால்வகைப் படையும் எம்மைத் தாக்கினால் நாம் இறந்து



படுவோம். இலக்கத்தெட்டு வீரரும் காற்றில் அகப்பட்ட பஞ்சுபோற் பறப்பர். இவர்களை எதிர்த்தால் வீரவாகுதேவர் அவமான மடைவர். வேற்கைப் பெருமானைத் தவிர இவர்களை எதிர்க்க வல்லவர் வேறு யார்? எட்டுத் திக்கிலும் வானிலும் நிலத்திலும் இடைவெளி சிறிதுமின்றி இவர்கள் சூழ்ந்து நிற்கின்றார்கள். எமக்கு ஓடித்தப்பவும் வழியில்லை. அதனால் இயன்றவரை இவர்களோடு போரிட்டு இறப்பதே உறுதியெனக் கூறிக்கொண்டு பூதர் சென்றனர்.

பூதசேனையின் வீரமிக்க தலைவர்களும் இலக்கத் தெண்மரும் வீரவாகுதேவரும் 'எமது வலிமை தொலைந்ததோ' என்றெண்ணினர். இந்திரனும் இமையவரும் தானவர் சேனையைக் கண்டு பயந்து நடுங்கித் துயருற்றனர்.

இந்திரன் திருமாலை நோக்கி "ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள அசுர படைகளெல்லாம் முருகப் பெருமானோடு போரிட வந்திருக்கின்றன. இவர்களோடு போர் செய்து வெற்றிகொள்ள முருகப்பெருமானுக்கும் ஊழிகாலஞ் செல்லும். அப்படியானால் அவுணர்களுடைய அரசன் இறப்பதெப்படி! சிறைப்பட்ட தேவர்கள் விடுதலை பெறுவதெப்படி! அரச செல்வத்தை இழந்ததால் எமக்கேற்பட்ட துன்பம் என்றுமே எம்மை விட்டகலாதோ? எம்மைச் சூழ்ந்திருக்கும் அவுண வெள்ளமாகிய நள்ளிருள் நீங்கி எமக்கு விடிவு வருவதில்லையோ?" என்றான்.

இந்திரன் இவ்வாறு கூற, சட சித்துக்கள் எல்லாவற்றோடும் இரண்டற நிருக்குங் காரணத்தால் காலதத்துவத்தோடுங் கலந்து காலதத்துவமாயும் அறிவற்றதாகிய காலதத்துவத்தின் வேறாகிய சித்துப் பொருளாதலால் காலதத்துவத்தின் வேறானவராய், காலங் கடந்தவராய், படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலையும் செய்பவரானாலும் எம்மைப் போற் கருவி காரணங்களால் எத்தொழிலையுஞ் செய்யாதவராய், 'இஃதிவ்வாறாகுக' என்றெண்ணுதலாகிய சங்கற்பத்தால் எதையுஞ் செய்பவராய் உருவத் திருமேனி கொள்பவரானாலும் உருவமில்லாத அரூபி யாய், படைத்தல், காத்தல், அழித்தற் றொழில்களைச் செய்யும்போது அத்தொழில்களுக்குரிய சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னுங் குணங்களை யுடையவர் போலக் காணப்படினும் எக்குணமுமற்ற நிர்க்குணராய், தொடக்க மில்லாதவராய் உலகுயிர்களின் இயக்கத்துக்கு மூலகாரணராயிருக்கும் அருள் வள்ளலாகிய சிவபெருமானே ஆறு திரு முகங்களோடு எழுந்தருளி யிருக்கிறார்." என்றார் திருமால்.

"காலமாய்க் காலமின்றிக் கருமமாய்க் கருமமின்றி
கோலமாய்க் கோலமின்றிக் குணங்களாய்க் குணங்களின்றி
ஞாலமாய் ஞாலமின்றி அனாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு முகங்கொண் டுற்றான்"

இவ்வாறு கூறிய திருமால் தொடர்ந்து,

"பாயிருங் கடலிற் சூழ்ந்த பற்றலர் தொகையை யெல்லாம்
ஏயெனும் முன்னம் வீட்டும் சிறுவ னென்றெண்ணல் ஐய
ஆயிர கோடி கொண்ட அண்டத்தின் உயிர்கட் கெல்லாம்
நாயகன் அவன்காண் நாம்செய் நல்வினைப் பயனால் வந்தான்."

என்றும் இன்னும் பல்வேறு விதமாகவும் முருகன் பெருமையை எடுத்துக் கூறி இறுதியாக

"துய்யதோர் குமர னேபோல் தோன்றிய முதல்வன் சூழ்ந்த
வெய்ய தானவரை யெல்லாம் விரைந்துடன் அறுத்து நீக்கிக்
கையில்வே லதனாற் சூரன் ஆற்றலுங் கடக்கும் யாதும்
ஐயுறேல் காண்டி."

என்று கூறி இந்திரனைத் தேற்றி, முருகப்பெருமானுக்குப் பக்கத்தில் நின்று போர் நிகழ்வுகளைப் பார்ப்பதற்காக இந்திரனையுந் தேவர்களையும் அழைத்துச் சென்றார்.

வீட்டும் - அழிக்கும்.

## ஆறுமுகக்கடவுள் போரிடச் சென்றார்

ஆறுமுகப்பெருமான் போர்க்களத்துக்குச் சென்றார். அவுணர்சேனை ஆரவாரித்துப் போரிடத் தொடங்கியது. அசுரரோடு போரிடுவதற்காக முன்னணியிற் சென்ற பூதசேனை தோல்வியடைந்தது. பூதத்தலைவர்கள் அசுரரை எதிர்த்துப் போரிட முடியாமற் பின்வாங்கினர். இலக்கத்தெண்மரும் அமர்க்களத்தை விட்டகன்றனர். இவற்றை யெல்லாங் கண்ட வீரவாகுதேவர் வில்லை வளைத்துச் சூரபன்மன் மீது சரமாரி பொழிந்தார். அதனால் அவுணரது அங்கங்கள் அறுபட்டு வீழ்ந்து மலைபோலக் குவிந்தன. ஆனாலும் அவரால் அசுர சேனையை அழிக்க முடியவில்லை. அழிக்க அழிக்க அசுரசேனை தொடர்ந்து வந்துகொண்டிருந்தது. அதைக் கண்டு



மனம்வருந்திய வீரவாகுதேவர் ஏகநாயகனாகிய முருகப் பெருமானுக்குப் பக்கத்திற் சென்றார்.

இவற்றையெல்லாங் கண்ட அசுரர், 'பூதர் ஓடிவிட்டனர், பூதத் தலைவர்கள் பின்வாங்கினர். இலக்கத் தெண்மரும் போரில் முரிந்து போனார்கள். இனி அந்தக் குழந்தைப் பிள்ளையே போரிட வருவான்' என்றெண்ணி, அவ்விடத்தைச் சூழ்ந்து நின்று பல படைகளையுஞ் செலுத்தி ஆரவாரஞ் செய்தனர்.

இவற்றையெல்லாங் கண்ட முருகப் பெருமான் புன்முறுவல் பூத்தார்; வில்லை எடுத்து வளைத்து நாணொலி செய்தார். அவ்வொலியைக் கேட்ட அவுணர்கள் அனைவருஞ் சிதைந்தனர். அவர்களுடைய தேர்கள் பிளந்தன. வரிசை வரிசையாக வந்த குதிரைகள் புரண்டன. யானைகள் விழுந்தன. முகில்கள் மழைத்துளிகளைப் பொழிவது போல முருகப் பெருமான் தன் வில்லிலிருந்து அம்புமழை பொழிந்தார். எண்ணற்ற அம்புகள் அசுரரது கொடிகளை அறுத்தன; குடைகளை அறுத்தன; படைவீரரை அறுத்தன; பரிகளை அறுத்தன; மதயானைகளை அறுத்தன; தேர்களையும் அவுணர் முடிகளையும் அறுத்தன.

சில அம்புகள் பூமியைப் பிளந்து கொண்டு விரைந்து சென்றன. சில அம்புகள் பாதாள உலகெங்கும் பரந்து சென்றன. சில அம்புகள் அண்ட முகட்டை ஊடுருவிச் சென்றன. சில அம்புகள் திக்கெங்குஞ் சென்றன.

"மேதினி கீண்டு விரைந்து புகும்
பாதல மூடு பரந்து செலும்
மூதகு மண்ட முகட் டுருவும்
மாதிர மேகுறும் வள்ளல் சரம்"

என்கின்றார் கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள்.

மேதினி - பூமி, மாதிரம் - திசை.

முருகப்பெருமான் ஏவிய அம்புகள் இவ்வாறு சென்றனவானாலும்,

"மூவிரு செய்ய முகத்தொருவன்
ஏவிய செஞ்சரம் எங்குமுறா
மேவலர் தங்களை வீட்டிடும்வே
றேவர்கள் கண்ணும் இறுத்திலவே."

என்கின்றது கந்தபுராணம்.

சரம் - அம்பு, மேவலர் - பகைவர், வீட்டிடும் - அழிக்கும், இறுத்தல் - தைத்தல்.

மக்கள் குடியிருக்குமிடங்கள், வைத்தியசாலைகள், ஆலயங்கள், பாடசாலைகள் முதலியவற்றைத் தாக்கியழிக்கும் விமானப்படையினர் பொழியும் குண்டுகளைப் போலன்றி, படையினர் ஏவும் எறிகணைகளைப் போலன்றி முருகப் பெருமான் ஏவிய பாணங்கள் எதிரிகளையே தாக்கியழித்தன என்பது இப்பாடலின் கருத்து. இது யுத்த தருமத்தைச் சுட்டிக் காட்டுவதோ டமையாது, இறைவன் எல்லா உயிர்களுக்கும் அவ்வவ்வுயிர் செய்த வினைகளுக் கீடான இன்ப துன்பங்களைக் கூடாமலுங் குறையாமலு மூட்டும் நீதிமான் என்பதையும் அவனது ஆணைப்படியே உலகெங்குமுள்ள சடப்பொருள்களும் சித்துப்பொருள்களும் இயங்குகின்றன என்பதையும் குறிப்பா லுணர்த்துகின்றது.

முருகப்பெருமான் ஏவிய அம்புகளால் அசுரர் படை அழிவதைக் கண்ட பிரமாவும் திருமாலும் இந்திரனும் 'அசுரர் அழிந்தனர். இனி நாம் எம்மை விட்டு நீங்காத துன்பங்கள் நீங்கப் பெறுவோம்' என்று கூறி மகிழ்ந்தனர்.

அப்போது அங்கு நிகழ்ந்த போரைப் பார்த்துக்கொண்டு நின்ற வித்தியாதரர் என்னுந் தேவசாதியார் போர்க்களத்தில் அசுரர் நெருங்கி நின்றதைக் கண்டனர். அவர்களை முருகப்பெருமான் அம்புகளால் அழிக்கிறாரா, வேற்படையினால் அழிக்கிறாரா, அல்லது வேறுவிதமாக அழிக்கிறாரா என்பதைக் கண்டறிவதில் அவர்கள் மிகுந்த ஆர்வமுடைய வர்களாகக் காணப்பட்டனர்; அந்த ஆர்வங் காரணமாக அங்கு நிகழ்ந்தவற்றை யெல்லாம் வைத்தகண் வாங்காமற் பார்த்தனர். இறுதியில் அவர்கள் கண்டறிந்ததென்ன? ஒன்றுமே யில்லை. கொலையுண்டு நிலத்தில் விழுந்து குவிந்துபோய்க் கிடந்த அசுர சேனையையே அவர்களாற் காண முடிந்தது.

"அடைந்தனர் விம்மிதம் ஆங்கவுணர்
மிடைந்தது நோக்கினர் வேற்படையோன்
தடிந்தது காண்கிலர் தாரணிமேல்
கிடந்தது கண்டனர் கேசரரே"

என்கின்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்

மிடைந்தது - நெருங்கி நின்றது, தடிந்தது - அழித்தது. தாரணி - பூமி, கேசரர் - வித்தியாதரர்.



முருகப்பெருமானது அம்புகளால் அண்டகோளகையின் உச்சிவரை நெருங்கி நின்ற அவுணசேனை அழிந்தது. அசுரசேனை நின்ற இடமெல்லாம் வெற்றிடமானது. அதைக்கண்டு தேவர்கள் மாத்திரமல்ல, இந்த அண்ட கோளத்துக்கப்பால் ஏனைய அண்டங்களில் நின்ற அசுரரும் மகிழ்ந்தனர். 'இனி எமக்கு எம்மரசனாகிய சூரபன்மனது பாதங்களைக் கண்டுதொழ வழி பிறந்துவிட்டதே' என்ற எண்ணமே அவர்கள் மகிழ்ச்சியடைந்ததற்குக் காரணம். அதனால் அவர்கள் மிகுந்த ஆர்ப்பரிப்புடன் இவ்வண்டத்துக்கு வந்து சேர்ந்தனர்.

இறந்து கிடந்த அசுர சேனையைக் கண்டிரங்கிய அவர்கள் ஒருவாறு தம்மனத்தைத் தேற்றிக் கொண்டு, 'இவர்களை அழித்தவனோடு போர்புரிந்து வெற்றியுடன் திரும்புவோம்' என்று தீர்மானித்தனர்.

அவர்கள் தம்மனத்தைத் தேற்றிக்கொண்டு போர்புரிய ஆயத்தமான போது, தனக்குத் தோற்றமும் முடிவுமில்லாதவராகிய முருகப்பெருமான் அவர்களுக்கு முன் தோற்றினார்.

## இவனோ பகைவன்!

முருகப்பெருமானைக் கண்ட அசுரர், 'இவனோ எமது பகைவன்! இவன் மிகச் சிறியவனாய் இருக்கிறான். இவனிடம் யானைப் படையுமில்லை; குதிரைப் படையுமில்லை. இவன் இவ்வண்ட மெல்லாம் நிறைந்து நின்ற எங்கள் சேனையை இமைப்பொழுதில் அழித்து விட்டானே! இதென்ன அதிசயம்? அதிருக்கட்டும். மன்னர் மன்னவன் இங்கு வந்து இவனோடு பொருவதன் முன்பு, நாம் யுத்தஞ் செய்து இவனை அழித்து விடுவோம்.' என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டு சென்று முருகப்பெருமானைச் சுற்றி வளைத்தனர்.

அதைக்கண்ட தேவர்கள் மனம் வருந்தினர்; பூதர்கள் பயந்து மனந் தளர்ந்தனர்; வீரவாகுதேவர் முதலிய வீரர்கள் மீண்டும் போர் மூண்டு விட்டதே என்றெண்ணி வருந்தினர்.

முருகப்பெருமான் வாயுதேவனை நோக்கி, 'அசுரர் நிற்குமிட மெங்கும் எமது தேரைச் செலுத்துவாயாக' என்று திருவாய் மலர்ந்தருளினார். வாயுதேவன் தேரைச் செலுத்தினான். அத்தேர் பூமியெங்குஞ் சென்றது; திசைகளெங்கும் பாய்ந்து சென்றது, ஆகாயத்திற் சுற்றி வந்தது; கடல்களின் மீது சென்றது. தேர் எங்கே நிற்கின்ற தென்பதைத் தேவர் களாலும் அறிய முடியவில்லை.

அந்தத் தேர் மனோவேகப் பொற்றேரல்லவா? அது செல்லும் வேகத்தைக் கற்பனை செய்து கூறுவதெப்படி? கூறமுடியாது. ஆனாலும் ஒருவாறு கற்பனை செய்து கூற முனைகின்றார் கச்சியப்பர்.

உயிர்க்குயிராகிய முருகப் பெருமான் எதிரிகள் மீதெய்யும் அம்புகள் அவர்களை நோக்கி விரைந்து செல்கின்றனவே! அவற்றையும் முந்திக் கொண்டு செல்கின்றதாம் மனோ வேகப் பொற்றேர்.

"ஒன்னலர் மீதின் உயிர்க்குயி ரானோன்
மின்னென வீசிய வெம்சர மாரி
பின்னுற முந்து பெயர்ந்திடு மென்றால்
அன்னவன் தேர்விரை வார்கணிக் கின்றார்"

என்கின்றது கந்தபுராணம்.

## குருதிக்குளம்

முருகப்பெருமான் ஒரே முறையில் எண்ணிறந்த ஆயிரகோடி அம்புகளைச் செலுத்தினார். அவ்வம்புகள் அசுரரைக் கொன்று குவித்தன. இரத்த வெள்ளம் கடல்போற் பெருகிப் பூமியிலுள்ள துவாரங்களுக்கூடாக, ஏழு பாதள உலகங்களுக்குஞ் சென்று நிரம்பி, திரும்பவும் பூமிக்கு வந்து, அலை கடல்போற் பொங்கி எழுந்து எல்லாத் திக்குகளையும் வானத்தையும் மறைத்தது. அந்த இரத்த வெள்ளம் விண்மீன்களை மீன்களாகவும் சந்திர சூரியர்களைத் தாமரை மலர்களாகவும் முகில்களைத் தோணிகளாகவுங் கொண்டதொரு செந்நீர்ப் பெருங்கடல் போல வானளவும் உயர்ந்து நின்ற தென்கின்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

"மீனு டுவாக விளங்கிய திங்கள்
பானு மலர்ந்திடு பங்கய மாகச்
சோனைகொள் மாமுகில் தோணிய தாக
வான்நிமிர் செம்புனல் மாகட லொக்கும்"

என்கின்றது கந்தபுராணம்.

உடு - நட்சத்திரம், பானு - சூரியன், பங்கயம் - தாமரை.

இவ்வண்ட மெங்கும் நிறைந்து நின்ற அவுணர் படை அழிந்து போதலும் ஏனைய அண்டங்களிலிருந்து படைகள் வருவதைக் கண்ட முருகப் பெருமான் தன் அம்புகளால் அவற்றையும் அழித்தொழித்தார்.



அவற்றை அழித்தொழித்தாலும் சூரபன்மனின் ஆட்சிக்குட்பட்ட ஏனைய அண்டங்களிலிருந்து இதுவரை வந்து சேராத படைகளெல்லாம் வந்து சேருமேயெனக் கருதிய கந்தக்கடவுள் தனது கணைகளால் அண்ட கோளகையின் வாயிலை அடைத்தார். தனது பன்னிரு விழிகளையும் ஊழித் தீபோலாக்கி, அவற்றால், குவிந்து கிடந்த பிணக் குவியல்களையும் இரத்த வெள்ளத்தையும் நோக்கினார். பிண மலைகள் எரிந்து சாம்பராயின, குருதி நீர்க்கடல் வற்றியது. மூவகை உலகங்களும் முன்புபோல் ஆயின. இதைக் கண்ட இமையவர் ஆர்த்தனர்.

"பாறு லாவருங் களேவரத் தமலையும் படிமேல்
வீறு சோணித நீத்தமும் வேவுற விழித்து
நீற தாக்கினான் சூரனை அட்டிலன் நின்றான்
ஆறு மாமுகன் ஆடலை உன்னின னாங்கொல்"

என்கிறார் கச்சியப்பர்.

பாறு - பருந்து, அமலை - குவியல், சோணிதம் - இரத்தம், நீத்தம் - வெள்ளம், அட்டிலன் - அழித்திலன்.

ஆம். சூரனுக்கு அருளுதற் பொருட்டு இன்னுஞ் செய்யவேண்டிய மறைத்தல், காத்தல், அழித்தல்களாகிய திருவிளையாடல்களைச் செய்யக் கருதினார் முருகப்பெருமான். சூரபன்மன் முத்தியடைவதற்கு முன் இப்பிறவியில் அனுபவித்துத் தொலைக்க வேண்டிய பிராரத்த கன்மங்களையெல்லாம் அனுபவித்துத் தொலைக்க வேண்டுமே! அதனால் முருகப் பெருமான் சூரபன்மனை அழிக்காது அவனைக் காத்தார். அவனுடைய அறிவை மறைத்து மீண்டும் போரிட வைத்தார்.

## சூரனது சூள்

"ஆகும் எல்லையில் ஒல்லையில் அடுகளத் தடைந்த
சேகு நெஞ்சுடைச் சூரனித் திறமெலாந் தெரிந்து
மாக நீடுநந் தானையை அலைத்தமாற் றலனை
நாகர் தம்மொடும் முடிக்குவன் யானென நவின்றான்".

ஒல்லையில - விரைவில், அடுகளம் - போர்க்களம், சேகு - வயிரம், தானை - சேனை, மாற்றலன் - பகைவன், நாகர் - தேவர்.

இவ்வாறு சூளுரைத்த சூரன் முருகப் பெருமானோடு போரிடக்கருதி சூறைக்காற்றுப்போல விரைந்து சென்றான். முருகக் கடவுளும் அவன்முன் சென்றார். அப்போது சூரபன்மன்,

"அறுமுகன் தோற்றமும் புடையில்
மிக்க பன்னிரு கரங்களும் வியன் படைக் கலனும்
தொக்க வீரமும் வன்மையும் நோக்கி."

முன்னாளிற் சிவபெருமானை மதியாது பேசிய தக்கனைப்போல, முருகப்பெருமானை மதியாது பின்வருமாறு கூறினான்:-

சிவபெருமான் அருளிய வரத்தினால் நான் இறக்கமாட்டேன். இன்று போல் என்றும் இருப்பேன். நான் பெற்ற வரத்தின் பெருமையை அறிந்த தேவர்கள்அதை மறந்தும் என்னுடன் போர் புரிந்திலர். என்னுடன் போரிட்டு இறந்தோர் பலர் நீ இவற்றையெல்லாம் அறியவில்லைப் போலும்.

"சிறந்த வான்மதி மிலைச்சினோன் அருள்புரி செயலால்
இறந்தி டேனியான் என்றுமிப் பெற்றியா யிருப்பேன்
மறந்து மென்னொடு பொருதிலர் தேவரும் மலைந்தே
இறந்து ளார்பலர் உணர்ந்திலை போலும்நீ இதுவே."

என்கிறது கந்தபுராணம்.

மிலைச்சுதல் - சூடுதல், மலைந்து - போர்புரிந்து.

போர்க்களத்தில் நிற்கும் போதும் சூரபன்மன் சிவபெருமான் தனக்குப் பேரருள் புரிந்த நிகழ்ச்சியைப் பெருமையுடனும் நன்றியுணர்வுடனும் நினைவு கூர்ந்தான்.

'எனக்கடிமை செய்து வருந்துகின்ற அமரர்தம் மொழியினை உண்மையென் றெண்ணி, சிறுபிள்ளைப் புத்தியினால் இங்கு வந்திருக்கிறாய். சேற்றில் அகப்பட்ட யானைக் கன்றுபோல அகப்பட்டுக் கொண்டாய், நீ எனது படையை அழித்தாய், பாலனென்றெண்ணி உன்னைப் பிழைத்துப் போக விடமாட்டேன். புறங்கொடுத் தோடினாலும் உன்னைத் துரத்திப் பிடிப்பேன்' என்று மிகுந்த இறுமாப்புடன் பேசினான் சூரபன்மன். அவனுடைய பேச்சைக் கேட்ட முருகப்பெருமான்,



"வெம்பு ரைத்தொழிற் கொருவனாம் கயவநீ வறிதே
வம்பு ரைத்தனை ஆவதொன் றில்லைநின் மார்பம்
செம்பு ரைப்பட யாம்விடு கின்றதோர் திறல்வாய்
அம்பு ரைத்திடும் மாறுனக் கென்றனன் அமலன்."

புரை - குற்றம். கயவன் - கீழ்மகன், புரை - துளை (3 ஆம் வரி), மாறு - பதில்

இவ்வாறு முருகப்பெருமான் கூறக்கேட்ட சூரபன்மன் பெரியதொரு வில்லையெடுத்து வளைத்தான். அதைக் கண்ட பூதருந் தேவரும் மதயானையை வலை வீசிப் பிடிக்க முயல்பவரைப் போலச் சூரபன்மனைச் சூழ்ந்து நின்று போரிட்டனர். சூரபன்மன் அம்பு மழை பொழிந்து, பெரு நெருப்பு அரக்கினாற் செய்யப்பட்ட மலையை அழிப்பது போலப் பூதரை அழித்தான். இலட்சத்தெட்டு வீரரும் வீரவாகு தேவரும் சூரபன்மன் மீது அம்புமழை பொழிந்தனர். சூரபன்மன் அவ்வம்புகளுக்கெதிராக அம்பு தொடுக்காது சும்மா நின்றான். அவனது உடலிற் பட்ட அம்புகள் அவனுக்கு எவ்வித ஊறுஞ் செய்யாமல் முறிந்து விழுந்தன.

## தூதனைக் கொல்லுதல் தகாது

சூரபன்மன் ஒரு முறையில் நூறுகோடி அம்புகளைச் செலுத்தி சூழ்ந்து நின்றவர்கள் செலுத்திய அம்புகளை அறுத்து அவர்களுடைய சிலைகளையுந் தேர்களையும் அறுத்தான். இலக்கத்தெண்மரும் அமர்க்களத்தை விட்டகன்றனர். வீரவாகு தேவர் சூரபன்மனுடைய தேரின் மீது பாய்ந்து சிவபெருமானாற் கொடுக்கப்பட்ட உடைவாளை உருவிச் சூரபன்மனுடைய வில்லைத் துண்டித்தார்.

சூரபன்மன் வீரவாகு தேவருடைய மார்பில் ஒரு கரத்தால் அடித்தான். வீரவாகு தேவருடைய மார்பிலிருந்து உதிரம் பெருகியது. வீரவாகு மயங்கி வீழ்ந்தார். சூரபன்மன் தூதாக வந்தவனைக் கொல்லுதல் தகாதெனக் கருதி அவரை எடுத்தெறிந்தான். வீரவாகு தேவர் உணர்வு வரப் பெற்று முருகப்பெருமானுக்குப் பக்கத்திற் சென்றார். சூரபன்மன் முரிந்த வில்லை எறிந்து விட்டுச் சிறந்ததொரு வில்லை எடுத்து, கேட்டோர் அனைவரும் நடுங்கும் படி நாணொலி செய்தான்.

முருகப்பெருமானும் ஒரு வில்லை எடுத்து நாணொலி செய்தார். அவ்வொலியைக் கேட்ட சூரபன்மன் வில்லை வளைத்து இருபதிலட்சம் அம்புகளைச் செலுத்தினான். அவ்வம்புகள் வானத்தை மறைத்தன: எட்டுத்திசைகளையும் மறைத்தன சந்திரனையும் நட்சத்திரங்களையும் மறைத்தன: சூரிய ஒளியை மறைத்தன, கடல்களை மறைத்தன: பூமியை மறைத்தன: காடுகளையும் மலைகளையும் மறைத்தன.

சூரபன்மன் செலுத்திய அம்புகளிற் சில காற்றைப்போல விரைந்து சென்றன. தீச்சுவாலை செல்வதுபோற் சென்றன: காலனைப்போலத் தறுகண்மையுடன் சென்றன: உயர்ந்தும் தாழ்ந்தும் வட்டமாகவும் பறக்கும் இயல்புடைய பருந்தின் இறகு போன்ற இறகுகளையுடையன: ஆலகால விடத்தினுங் கொடியன: பல தலைகளையுடையன: இறுமாப்புடையன: மகாமேரு மலையைத் துளைப்பன: மலைகளைக் கிழிப்பன: அண்ட முகட்டைத் துளைப்பன: இடியேற்றினை ஒப்பன: நஞ்சுண்டுமிழ்வன: கருமை நிறமுடையன: செந்நிற முடையன.

இதைக் கண்ட தேவர்கள் கண்ணனை அணுகி, கைகளை உதறி, 'ஐயனே, எமக்கு ஒளித்திருப்பதற்கு எங்காவது இடமுண்டா?' என்று கேட்டனர். பயந்துபோய் பதுங்கியிருக்க இடங்கேட்டவர்களுக்குக் கண்ணன் பதில் கூறும் முன்பே முருகப்பெருமான் சில அம்புகளை எய்து சூரபன்மன் ஏவிய பாணங்களை அறுத்தார். அதைக்கண்ட அமரர்கள் உள்ளம் பூரித்தனர்.

முருகப்பெருமானும் சூரபன்மனும் ஒருவர் மேலொருவர் அம்புகளைச் செலுத்திப் போரிட்டனர்.

"ஐயன்விடு வாளிகளை அவ்வசுரன் நீக்கும்
வெய்யன்விடு வாளிகளை வேள்கடி தறுக்கும்
எய்யும்நெடு வெம்பகழி இற்றவைகள் சிந்தி
வையம்மிசை போகியன வானமணித் தென்ன."

ஐயன் - முருகன், வாளி - அம்பு, வெய்யன் - கொடியவன், இற்றவைகள் - முறிந்தவைகள், வையம் - பூமி.

ஒருவர் விட்ட அம்புகளை மற்றவர் விட்ட அம்புகள் அறுத்ததனால் முறிந்து வீழ்ந்த அம்புகளின் குவியல் வானமும் அணித்தென்ன உயர்ந்து நின்றதென்பது இச் செய்யுளின் கருத்து.



இவ்வாறு போர் நிகழும் போது,

"தார்கெழுவு வேற்படைத் தடக்கை யுடையோனும்
சூரனுமிவ் வாறமர் இயற்றுதொழில் காணா
வீரமட மாதுளம் வியந்திவர் தமக்குள்
ஆரிடை நடத்துமென ஐயமொடு நின்றாள்."

என்கின்றார் கச்சியப்பர்.

வீரமடமாது- வீரலட்சுமி, தார் - மாலை, வியந்து - அதிசயித்து.

இவ்வாறு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஆறுமுகப் பெருமான் ஏவிய அம்புகளை அழித்த சூரபன்மன், அவரது தேரின் மீது அசைந்து கொண்டிருந்த கொடியை அறுத்து வீழ்த்தி ஆரவாரித்து வெற்றிச் சங்கை ஊதிச் சிறிது நேரமும் தாமதிக்காது மீண்டும் அம்பு களைச் செலுத்தி முருகப்பெருமானது உருவத்தை மறைத்தான்.

அப்பொழுது முருகப்பெருமான் தன்னை மறைத்த அம்புகளைத் தானேவிய அம்புகளால் அறுத்து, ஏழு அம்புகளைச் செலுத்தி, சூரபன்மனது தேரிலிருந்த கொடியை அறுத்து ஆழ்கடலில் வீழ்த்தினார். அதனைக் கண்ட பானுகம்பன் என்னும் பூதன் தன் ஆயிரம் வாயிலும் ஆயிரம் சங்குகளை வைத்து ஊதினான். திருமாலுடைய பாஞ்சசன்னியம் என்னுஞ் சங்கு ஒலித்தது.

## அக்கினி தேவன் கொடியானான்

தேவர்கள் அக்கினி தேவனை நோக்கி 'இப்பொழுது முருகப் பெருமானது தேரிற் கொடியில்லை. நீ அத்தேரிற் கொடியாக விளங்கு வாயாக' என்றனர். அக்கினி தேவன் கொடியாகி. தேவ தேவனது திரு நெடுந் தேர்மீது நின்று கூவினான்.

அவ்வொலி அசுரராகிய இரவு நீங்கி விடியற்காலம் வரப்போகின்ற தென்பதைப் புலப்படுத்துவது போலிருந்தது. திருமாலும், பிரமாவும் ஆரவாரஞ் செய்தனர். சூரிய சந்திரர் ஆரவாரஞ் செய்தனர். வாயு தேவனும் இந்திரனும் ஆரவாரஞ் செய்தனர். கடலுக்கரசனாகிய வருணன் ஆரவாரஞ் செய்தான். குபேரன் ஆரவாரஞ் செய்தான்.

இவ்வாரவாரத்தைக் கேட்ட சூரபன்மன் நஞ்சுண்டவனைப் போன்று கோபத்துடன் பார்த்தான். 'என்முன் வருவதற்கஞ்சி பருந்துபோலக் காடுகளில் அலைந்து திரிந்த தேவர்கள் இப்பொழுது என் முன் வந்து ஆரவாரஞ் செய்கின்றார்கள். அறுமுகனின் வலிமையினாற்றான் இவர்கள் இவ்வாறு செய்கிறார்கள் போலும். நல்லது நல்லது. நான்முகன் முதலிய தேவர்களை நிலைகுலையச் செய்து, அவர்களைக் கொன்று அதன் பின் குமரனைக் கொல்வேன்' என்று சூரபன்மன் சீறினான்.

'இச்சிறுவனுடன் செய்யும் போரை நிறுத்திவிட்டு, விண்ணில் நின்று ஆர்ப்பரிக்கும் அமரரின் வீரத்தை முதலில் அழிக்க வேண்டும். தேரை ஆகாய மார்க்கத்திற் செலுத்து' என்று சூரபன்மன் தனது தேரோட்டிக்குக் கட்டளையிட்டான். தேரோட்டி தேரை விண்வெளியிற் செலுத்தினான். தேர் தேவர்கள் நின்ற இடத்திற்குச் சென்றது. சூரபன்மன் தேவர்கள் மீது அம்புகளைச் செலுத்தினான். தேவர்கள் சிதறி ஓடினர்.

சூரபன்மன் தேவர்கள் மீது அம்பு செலுத்துவதைக் கண்ட சிவகுமாரன் தான் நின்ற இடத்தில் நின்றவாறே எண்ணற்ற அம்புகளைச் செலுத்தி, சூரபன்மன் ஏவிய பாணங்களை அறுத்தபின் தனது தேரை விண் வெளியிற் செலுத்துமாறு பாகனுக்குக் கூறினார். முருகப்பெருமானது தேர் சூரபன்மனுக்கு முன் சென்றது. முருகப் பெருமான் தேவர்களை நோக்கி, 'நீங்கள் அஞ்ச வேண்டாம்: மனம் வருந்த வேண்டாம், புலம்ப வேண்டாம்' என்று கூறி அவர்களுக்கு அபயகரத்தைக் காட்டினார். தேவர்கள் ஓடுவதை விட்டு உவகை அடைந்தனர்.

இதைக் கண்ட சூரபன்மன் வெகுண்டு நகைத்து வாயு வேகத்திற் செல்லும் எண்ணற்ற அம்புகளைச் செலுத்தினான். முருகப்பெருமான் அம்புகளை ஏவி அவற்றை அறுத்தார். தேர்கள் சென்ற வேகத்தாலும் இருவரும் செலுத்திய அம்புகளாலும் உலகம் அதிர்ந்தது. சமுத்திரங்கள் நிலைகுலைந்தன. மலைகள் வெடித்துச் சிதறின. அண்ட முகடு பிளந்தது விண் மீன்கள் உதிர்ந்தன, முகில்கள் சிதறி விழுந்தன.

## சூரனது தேர் அழிந்தது

சூரபன்மன் முருகப்பெருமான் மீது அளவற்ற படைகளைச் செலுத்தினான். அவற்றையெல்லாம் அழித்த முருகப்பெருமான் பதினான்கு அம்புகளைச் செலுத்திச் சூரபன்மனது சித்திரத்தேரையும் குதிரைகளையும் அழித்தார். சூரபன்மன் வில்லுங் கையுமாகப் பூமிக்கு வந்தான். போர் தொடர்ந்து நடந்தது.



முருகப்பெருமான் செலுத்திய ஆயிரம் அம்புகளும் சூரபன்மனுடைய தோளிற் பட்டவுடன் வயிர மலைமீது பொழிந்த கல்மழை வெடித்துச் சிதறுவது போலச் சிதறி விழுந்தன. சூரபன்மன் முருகப்பெருமானின் மார்பிற் படும்படியாக இரண்டாயிரம் அம்புகளை எடுத்து விரைவாகச் செலுத்தினான். அவ்வம்புகள் சிவபெருமானது நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய தீயினால் மன்மதனது உடம்பு எரிந்து சாம்பராகிப் பறந்தது போலத் தூள் தூளாகிப் பறந்தன.

சூரபன்மன் ஆறுமுகப் பெருமான் ஏவிய அம்புகளை அறுத்து, இலக்கத்தெட்டு வீரர் மீதும் பூதப்படைகள் மீதும் அம்புகளைச் செலுத்தினான். அதைக் கண்ட முருகப் பெருமான் ஓராயிரம் பகழிகளாற் சூரபன்மன் வளைத்த வில்லை அறுத்தார். சூரபன்மன் பின்பும் ஓர் வில்லை எடுத்து ஆரவாரஞ் செய்தான். சிறிது நேரம் பூமியில் நின்று போர் புரிந்த சூரபன்மன் அச்சத்தோடு சென்று ஆகாயத்திற் றோன்ற, முருகப் பெருமான் அவ்விடத்திற்குச் சென்று போரிட்டார். ஒரு கணம் முருகப் பெருமானை எதிர்த்து நின்ற சூரபன்மன் மாயப்போர் செய்யக் கருதினான்.

விண்ணிடை நின்ற சூரபன்மன் மறைந்து சென்று மீண்டும் பூமிக்கு வர செவ்வேட் பெருமானும் பூமிக்கு வந்து போரிட்டார். சூரபன்மன் தன் தோற்றத்தை மாற்றிக் கொண்டு நன்னீர்க் கடலின் நடுவிற் சென்றான். முருகப்பெருமான் அவ்விடத்திற்குச் சென்று போரிட்டார். சூரபன்மன் மாயையால் மறைந்து திசைகளின் அந்தத்துக்குச் சென்றான். முருகப்பெருமான் அவ்விடத்துக்குச் சென்று போரிட அவன் பாதலத்திற் புகுந்தான். முருகப்பெருமான் அங்கும் சென்று போரிட்டார். சூரபன்மன் தன் உருவை மாற்றிக் கொண்டு சென்று பொன்மயமான மேருமலையின் உச்சியில் நிற்கக் கந்தக்கடவுள் அங்கும் சென்று போரிட்டார். அங்கிருந்து சூரபன்மன் வைகுந்தத்திற்கும் அண்ட கோளத்தின் மேற்புற வாயிலுக்குச் செல்ல அவனைத் தொடர்ந்து சென்று போரிட்டு அவனுடைய தேரை அழித்தார் முருகப் பெருமான்.

## இந்திர ஞாலம் வந்தது

தேரழிந்ததுஞ் சூரபன்மன் சிவபெருமானாற் றனக்குக் கொடுக்கப்பட்ட இந்திர ஞாலத் தேரை நினைத்தான். அது ஆகாய மார்க்கமாக அவனிடம் சென்றது. அந்தத் தேரின்மேலேறி யுத்தம் செய்யத்தொடங்கிய சூரபன்மன், முருகப் பெருமான் அம்புகளால் அண்ட கோளத்தின் வாயிலை அடைத்திருப் பதையும் அதனால் அதற்கப்பாலுள்ள தனது சேனைகள் வரமுடியா திருப்பதையு மறிந்தான்.

உடனே தன் வில்லை வளைத்து, அநந்தகோடி அம்புகளை எய்து, அண்ட கோள வாயிலை அடைத்திருந்த அம்புகளை அறுத்த பின் தன் சேனைகளை அழைத்தான். அவனுடைய நால்வகைப் படைகளும் வந்து முருகப்பெருமானைச் சூழ்ந்து நின்று ஆரவாரஞ் செய்தன. ஆகாய மார்க்கத்தில் நின்ற பிரமா முதலிய தேவர்கள் அதைக் கண்டு மனங் கலங்கினர்.

முருகப்பெருமான் அக்கினி மயமான தன் கண்களால் அசுர சேனைகளைப் பார்த்தார். அசுர சேனை எரிந்து சாம்பரானது. அதன் பின்பும் ஏனைய அண்டங்களிலிருந்து படைகள் வந்து போரிடத்தொடங்கின. அந்தச் சேனா சமுத்திரத்தை நோக்கிய முருகப்பெருமான் அக்கினியைச் சொரிவது போல நெட்டுயிர்த்து உரப்பினார். பஞ்சு மலை தீயினால் அழிவது போல அசுர சேனை முருகப்பெருமானது நெட்டுயிர்ப்பினால் எரிந்து சாம்பராகிப் பறந்தது.

அதன் பின்பும் ஏனைய அண்டங்களிலிருந்து படைகள் வந்தன. அவற்றைக் கண்ட முருகப் பெருமான் தன் கையிலிருந்த மழு, சூலம், சக்கரம், கதை, எழு என்னும் படைக்கலங்களைப் பார்த்து, நீங்கள் பலவேறு வடிவங்களை எடுத்துச் சென்று இங்கு வருகின்ற படைகளையும் வருவதற்கிடமின்றி அப்பாலுள்ள அண்டங்களில் நிற்கும் படைகளையுங் கொன்று வாருங்கள்' என்று கூறி அவற்றைத் தொட்டார். அவை விரைந்து சென்று ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமிருந்த சூரபன்மனது படைகளை அழித்தன.

இவற்றை எல்லாம் அவதானித்த சூரபன்மன் 'ஒரு கணத்தின் முன்னம் இவனது உயிரை உண்பேன்' என்றெண்ணி சிவபெருமானிடமிருந்து பெற்ற சக்கரத்தை எடுத்துப் பூசனை புரிந்து அதை முருகப் பெருமான் மீது ஏவினான். சக்கரப்படை முருகப் பெருமானை நோக்கி விரைந்து சென்றது. முருகப்பெருமான் தன்னொருகரத்தை நீட்டி அந்தச் சக்கரத்தைப் பற்றினார். உடனே மாயங்களைச் செய்ய வல்ல இந்திரஞாலத் தேரின் மேல் நின்ற சூரபன்மன் எண்ணற்ற மாயவடிவங்களைக் கொண்டு அம்புமாரி பொழிந்தான். முருகப்பெருமான் ஞானாஸ்திரத்தை எடுத்து விட்டார். அது சூரபன்மன் கொண்ட மாய வடிவங்கள் அனைத்தையும் அழித்தொழித்தது. சூரபன்மன் தனியொருவனாகித் தன் தேரின் மீது நின்றான். அமரர் ஆறுமுகப் பெருமானைப் போற்றிப் பூமாரி பொழிந்தனர்.



## சூரன் அண்ட கூடஞ் சென்றான்

சூரபன்மன் திடீரென மறைந்து அண்ட கூடச் சுவரின் வாயிலை அடைந்து ஆரவாரித்து அறை கூவி அப்புறத்து அண்டத்திற்குச் செல்ல, ஆன்மாக்களின் மலங்களைக் கழுவுந் தீர்த்தனாகிய முருகப் பெருமான் மனோவேகப் பொற்றேரிற் சூரபன்மன் நின்ற இடத்தைச் சென்றடைந்தார். சூரபன்மன் சிறிது நேரம் முருகப்பெருமானோடு போரிட்ட பின் மாயா தந்திரத்தால் அப்பாலுள்ள அண்டத்துக்குச் சென்றான். அண்டங்கள் தோறுஞ் சென்ற சூரபன்மனைத் தொடர்ந்து சென்று முருகப்பெருமான் போரிட்டார்.

முருகப்பெருமான் சூரபன்மன் செல்லுமிடந்தோறுஞ் சென்று போரிட்ட நிகழ்ச்சியை, தத்துவங்களோடு கூடிய பெத்த நிலையில், இறைவன் ஆன்மாக்களின் அறிவை மறைக்கும் ஆணவமலத்துக்கும் பின்னிலையில் திரோதான சத்தியென நின்று, ஆன்மாக்கள் செல்லும் வழியெல்லாஞ் சென்று, போகங்களில் ஆழ்த்தி அவற்றுக்கு உபகரிக்கும் அருட் செயலைக் குறிப்பதாகக் கருதலாம்.

"கோலங் கொண்ட வாறுண ராதே
ஞாலங் காவலன் யானெனக் கொளீஇப்
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்
தோடாப் பூட்கை நாடி நாடா
என்னுட் கரந்தென் பின்வந் தருளி
என்னையுந் தன்னையு மறிவின் றியற்றி
என்னது யானெனு மகந்தையுங் கண்டு
யாவையின் யாவையும் யாங்கணுஞ் சென்று
புக்குழிப் புக்கு பெயர்ந்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்டு
எற்பணி யாளாய் எனைப்பிரி யாதே
ஓடி மீள்கென ஆடல் பார்த்திட்டு
என்வழி நின்றனன் எந்தை......"

என்கின்றது இருபா இருப∴து (18.1-13)

**இதன் பொருள்:** இறைவன் தன்னை ஆட்கொள்ள வந்திருக்கின்றான் என்பதை அறியாமையால், தானே உலகத்துக்குக் கருத்தா எனவும் ஓடாத பேய்த் தேரின் இயல்பை ஆராய்ந்து அறியாமையால் அதை மெய்யான தென்றுங் கருதுபவரைப்போல, நிலையற்றதாகிய பிரபஞ்சத்தை நிலையானது என்று எண்ணுகின்ற எனக்குள்ளே மறைந்து, என்னை முன்னிலைப் படுத்தி, எனதியல்பையும் தனதியல்டையும் அறியாதபடி செய்து, யான் எனதென்னும் அகந்தையை உண்டாக்கி, எந்த உடலிலாயினும் எந்த உலகத்திலாயினும் நான் புகுந்த இடமெங்கும் புகுந்து, மீண்ட இடமெங்கும் தானும் மீண்டு வந்து, நான் அனுபவிக்கவேண்டிய இன்ப துன்ப அனுபவங்களைக் கூடாமலுங் குறையாமலும் என்னை அனுபவிக்கச் செய்து, எனக்கு ஏவலாளனாய் என்னை விட்டுப் பிரியாதே 'நீ போகும் வழியெல்லாம் போய்த் திரும்பி வா' என என்வழியில் நின்றனன் எமது பிதாவாகிய இறைவன்.

## திருமாலின் உபதேசம்

முருகப்பெருமானைக் காணாத தேவர்கள் தந்தை தாயரைப் பிரிந்த பிள்ளைகளைப் போலத் தேம்பித் தேம்பி அழுது திருமாலைப் பார்த்து,

"மாகம் மேல்நிமிர் மற்றையண் டத்திலும்
சேகு லாவிய சிந்தையன் தன்னுடன்
ஏகி னானையன் என்னினித் தான்விளை
வாகு மோவென்று அஞ்சுதும் ஏழையேம்" என்றனர்.

மாகம் - ஆகாயம், சேகு - செருக்கு.

"ஈறி லாதமர் பரமனே குழவியின் இயல்பாய்
ஆறு மாமுகங் கொண்டுதித் தானென்ப தல்லால்
வேறு செப்புதற் கியையுமோ மேலவன் தன்மை
தேறி யும்தெளி கின்றில உமதுசிந் தையுமே."

"ஐயம் எய்தலிர் ஆயிர கோடி அண்டத்தும்
வெய்யன் ஏகினுந் தொடர்ந்து போய் வெஞ்சம ரியற்றி
செய்ய வேலவன் துரந்துவந் திடுந்தினைத் துணையில்
கையில் நெல்லிபோற் காட்டுவன் நீவிருங் காண்டிர்" என்றார்.



அவர்களுடைய அச்சம் ஒருவாறு அகன்றது.

அண்டந்தோறும் நின்று போர்புரிந்த சூரபன்மன் திரும்பவும் மகேந்திரபுரத்து போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தான். தம் நிழலைப் பிரியாது தொடர்ந்து செல்பவரைப்போல, ஆறுமுகப்பெருமானும் அவனைத் தொடர்ந்து வந்து களம் புகுந்தார். அங்கிருந்த அசுர சேனை கோபங்கொண்டு முருகப்பெருமானைச் சூழ்ந்து நின்று படைகளை ஏவியது. அவர்களைப் பார்த்து முருகப்பெருமான் புன்முறுவல் செய்தார். சிவபெருமானது புன்முறுவலால் முன்னாளில் முப்புரங்களும் எரிந்து சாம்பரானது போல, அசுர சேனையும் எரிந்து சாம்பரானது அந்தச் சாம்பர் மேட்டைப்பார்த்து மகிழ்ந்த வானவர் பூத்தூவி முருகப்பெருமானை வழுத்தினர்.

## மாயை வந்தாள்

முருகப்பெருமானின் முறுவலால் தனது சேனை முழுவதும் துகளாகி அழியத் தனித்தவனாகி நின்ற சூரபன்மன் தனது தாயாகிய மாயையை நினைக்க அவள் வந்து தோன்றி "மைந்தனே, நீ மனந்தளர்ந்து என்னை அழைத்தாய் உன் எண்ண மென்னவென்று கூறு" என்றாள்.

"தாயே, வீரம் மிக்க தம்பியரும் மைந்தரும் மந்திரிமாரும் சேனையும் இறந்து போக, நான் மட்டும் தனிமரமாக நிற்கின்றேன். அவர்கள் அனைவரையும் உயிர்பெற்றெழச் செய்வதற்குரிய உபாயத்தைக் கூறுக." என்றான் சூரபன்மன். மகன் கூறியதைக் கேட்ட மாயை சிரித்தாள். பின்பு தனது மகனை நோக்கி,

"உறுபடை சுற்றந் துஞ்ச ஒருவனே யாயும் விண்ணோர்
சிறைவிடுத் துய்யு மாறு சிந்தனை செய்தி லாய்நீ
அறுமுகன் தன்னோ டின்னும் அமர்செயக் குறித்தி யாயின்
நிறைபெருஞ் செல்வ வாழ்க்கை நீங்கினை போலு மன்றே."

"பன்னிரு தடந்தோள் கொண்ட பகவனைப் பால னென்றே
உன்னலை அவன்கை வேலால் ஒல்லையிற் படுதி கண்டாய்
இன்னுயிர் துறக்க நின்றாய் என்மொழி கேட்பாய் அன்றே
சென்னியில் விதியை யாவ ராயினுந் தீர்ந்தா ருண்டோ." என்றாள்.

ஒல்லையில் - விரைவில், சென்னி - தலை.

இவ்வாறு கூறிய மாயை தொடர்ந்தாள். 'கெடுகுடி சொற்கேளாது. ஆனாலும் இறந்தவர்களை எழுப்பவேண்டுமானால் அதற்கு வழி சொல்லு கின்றேன் கேள். புறக்கடலின் ஒருபக்கத்தில் மணங்கமழும் அமுதசீத மந்தரகூடம் என்றொரு மலை இருக்கிறது. அதை இங்கே கொண்டு வா. உனது எண்ணம் நிறைவேறும்'. என்று கூறிய மாயை அங்கிருந்து சென்றாள். மாயை சூரபன்மனுக்குச் செய்தது இறக்கப்போகிறவர்களுக்கு அவர்கள் விரும்பிய பண்டங்களை உறவினர் கொடுப்பது போன்றதொரு உபகாரம். சூரபன்மன் இந்திரஞாலத் தேரினின்று மிறங்கி, தெய்வத்தன்மை பொருந்திய தனது சிங்க வாகனத்தில் ஏறினான். இந்திரஞாலத் தேரைப் பார்த்து 'நீ எனது மனவேகத்தைப் போல விரைந்து சென்று அந்த மடைந்தோருக்கு ஆவியளிக்கும் அமுதங் கொண்ட மந்தர மலையை அகழ்ந்து கொண்டுவா' என்றான். அந்தத் தேர் மந்தரகிரியை அகழ்ந்து கொண்டு மனோவேகத்தில் மகேந்திரபுரிக்கு வந்தது. அந்த அமுதமலையிலிருந்து வந்த காற்றினால் இறந்த அசுரர் அனைவரும் உடலூறு நீங்கி உயிர்பெற்று ஆலகால விடமெழுந்தது போலவெழுந்தனர்.

## தேவர்கள் பறவைகள் ஆனார்கள்

அதைக் கண்ட சூரபன்மன் வயிற்றை நிரப்பச் சோற்றுக்கு வழியின்றி வருந்தியவன் அரியணை ஏறி இந்திரச் செல்வம் எய்தினால் மகிழ்வது போல் மகிழ்ந்தான். அமரர் முன்பொருநாள் ஆலகால விடமெழக் கண்டு அஞ்சியது போல் அசுரர் உயிர்பெற் றெழக்கண்டஞ்சி, 'இவ்விடத்தை விட்டோடுவோம்' என்றெண்ணினர்.

"கிள்ளை புறாமயில் கேழ்கிளர் அன்னம்
பிள்ளை மணிக்குயில் பேரிசை ஆந்தை
கள்ளுணும் வண்டு கரண்டம தாதிப்
புள்ளுரு வங்கொடு வானவர் போனார்".

கிள்ளை - கிளி, கேழ் - நிறம், பிள்ளை - காகம், கரண்டம் - நீர்க்காகம், புள் - பறவை.

பூதர்கள் தாம் அசுரரால் இறக்கப்போவதாகக் கருதிக் கவலை யடைந்தனர். இலக்கத்தெண்மரும் வீரவாகுதேவரும் துன்பமும் அச்சமும் அதிசயமும் குழப்பமும் கடுங்கோபமுங் கொண்டு நெட்டுயிர்த்து நின்றனர்.



இவற்றையெல்லாங் கண்ட முருகப்பெருமான் கைகொட்டி நகைத்தார். சிங்கமுகாசுரனும் அரசகுமாரரும் தருமகோபனும் சேனைத் தலைவர்களுஞ் சூரபன்மனிடஞ் சென்று,

"எந்தை நீயிவண் நிற்குதி யாமெலா மேகிக்
கந்த வேளுடன் அவன்படை வீரரைக் கடிந்து
சிந்த ராகிய பூதர்தந் தொகையையுஞ் செகுத்து
வந்து நின்னடி வணங்குதும் வல்விரைந் தென்றார்."

சிந்தர்-குறுகிய வடிவமுடையோர், கடிந்து-அழித்து, செகுத்து-கொன்று.

சூரபன்மன் அவர்களுக்கு அனுமதியளித்தான். அசுரர் படை கந்தனைச் சூழ்ந்து அவர்மீது ஆயுதங்களைச் செலுத்தியது. கந்தவேள் சர்வசங்காரப் படையை எடுத்து, சிந்தையாற் பூசனை புரிந்து, அசுரர் படையை அழிக்குமாறு கூறி ஏவினார். அது உயிர்த்தெழுந்தவர் அனைவரையும் அழித்து, இந்திர ஞாலத்தின் மேலிருந்த மந்தர மலையைப் பொடி படுத்தியபின் கந்தக் கடவுளிடம் மீண்டு வந்தது. இறந்தவர்களை உயிர்பெற்றெழச் செய்த மந்தர மலை அழிவற்றிருக்கும்போதே, அதனால் உயிர்பெற்றெழுந்த அசுரர் அனைவரும் அழிந்த நிகழ்ச்சி, ஈசனே காக்கி னல்லால் எவரையும் வேறெவருங் காக்க முடியாதென்ற உண்மையை உணர்த்துகிறது.

உயிர்த்தெழுந்தவர் அனைவரும் இறந்ததைக் கண்ட சூரபன்மன் சினங்கொண்டு, எனது படைகளையெல்லாம் அழித்த பாலனையுந் தனியனாக நிற்கச் செய்து, அவனையுங் கொல்வேனென்றெண்ணி, இந்திர ஞாலத்தேரை நோக்கி, பூதரையும் இலக்கத்தொன்பது வீரரையுங் கவர்ந்து கொண்டு சென்று அண்ட முகட்டில் வைத்திருப்பாயாக' என்றான். இந்திர ஞாலத்தேர் அவன் கூறியபடி செய்தது. முருகப்பெருமான் போர்க்களத்தில் தனித்து நின்றார். அதைக்கண்ட அவுணர்கோன் மகிழ்ச்சியோடு சிரித்தான். அமரர்கள் மீண்டும் மனந்தளர்ந்தனர். இவ்வாறு மனந்தளர்வதும் மனம் மகிழ்வதும் அமரைக் கண்ட அமரருக்கு அன்றாட அனுபவங்களாகிவிட்டன.

சுவர்க்கம் நல்வினைப் பயனை அனுபவிப்பதற்குரிய இடம். நரகம் தீவினைப்பயனை அனுபவிப்பதற்குரிய இடம். தக்க யாகத்திற் பங்குபற்றிய தீவினைப் பயனையும் முன் செய்த நல்வினைப் பயனையும் தேவர்கள் இப்போது அனுபவிக்கின்றார்கள். இருவினைப்பயனையும் அனுபவித்துத் தொலைப்பதற்குரிய இடம் இந்தப்பூமி என்ற உண்மை இதன் மூலம் உணர்த்தப்படுகின்றது. 'இந்தப்பூமி' சிவனுய்யக் கொள்கின்ற ஆறு' என்கின்றது திருவாசகம்.

முருகப்பெருமான் வில்லை வளைத்து ஒரு அம்பைத் தொடுத்து 'எனது சேனையைக் கவர்ந்து சென்று அண்டமுகட்டில் வைத்திருக்கும் இந்திரஞாலத் தேரை விரைவாகக் கொண்டு வா'. என்று கூறினார். அவ்வம்பு வேற்படையைப் போல விரைந்து சென்று, இந்திரஞாலத் தேரின் வலியைக் கெடுத்து அதைப் பிடித்துக் கொண்டு வந்து முருகப்பெருமானுக்கு முன் நிறுத்தியது.

வீரவாகு தேவரும் பூதரும் இலக்கத்தெண்மரும் தேரினின்று குதித்தனர். முருகப்பெருமான் இந்திரஞாலத் தேரை நோக்கி, 'நீ சூரனிடம் போக வேண்டாம். அவன் இறப்பது திண்ணம். மாயஞ் செய்யவல்ல தேரே, நீ இங்கே நில்'. என்று ஆணையிட. அத்தேர் அவுணர் கோனிடம் மீண்டு போவதற்கஞ்சி முன்னைய வலிமை நீங்கப் பெற்று முருகப்பெருமானின் ஆணை வழி நின்றது.

சூரபன்மனுடைய மாயத் தேர் மயக்கம் செய்யும் ஆற்றலை இழந்து அவனை விட்டகன்று நின்றதென்றதன் மூலமும், மாயை 'பன்னிருதடந்தோள் கொண்ட பகவனைப் பாலனென்றே எண்ணலை' என்று கூறி விளக்கஞ் செய்து அவனை விட்டகன்றாள் என்றதன் மூலமும் அவனுக்கு மலசக்தி தேய்தலாகிய மலபரிபாகம் நிகழ்ந்த தென்பதைச் சுட்டுகின்றது கந்தபுராணம்.

இந்திரஞாலத்தேர் தன்னிடந் திரும்பி வராததை அறிந்த சூரபன்மன் வில்லை வளைத்து முருகப்பெருமான் மீது அம்புகளைச் செலுத்தினான். முருகப்பெருமானும் அம்புகளை ஏவினார். சூரபன்மன் முருகப்பெருமானின் தேர்ச் சாரதியாகிய வாயுதேவனின் உடலெங்கும் படத்தக்கதாக அம்புகளை ஏவி அமர்செய்தான். வாயுதேவன் வருந்திச் செயலற்றிருந்தான். முருகப் பெருமான் அம்புகளை ஏவி, சூரபன்மனுடைய வில்லைக் கண்டதுண்டமாக வெட்டினார்.

வில் முறிந்தவுடன் சூரபன்மன் சிவபெருமான் தனக்குக் கொடுத்த சூலத்தை எடுத்துக்கொண்டு சிங்கத்தின் மீதேறி முருகப்பெருமானுடைய தேருக்குமுன் சென்றான். சிங்கேறு தனது முன்கால்களிலுள்ள நகங்களால் முருகப்பெருமானது தேரிற் பூட்டிய குதிரைகளைத் தாக்கியது. சூரன் முருகப்பெருமான் மீது சூலத்தை ஏவினான். சூலம் இடிமுழக்கத்தோடு சென்றது. அதைக் கண்டு உயிர்க்கூட்டங்கள் வருந்தின. தேவர்கள் அஞ்சி ஓடினர். முருகப்பெருமான் சூலத்தை நோக்கி ஆயிரகோடி அம்புகளைச் செலுத்தினார். அவற்றையெல்லாம் அழித்த சூலப்படை சூரபன்மனது கோபாக்கினி ஓருருக்கொண்டு சென்றாற்போல முருகப் பெருமானை நோக்கிச் சென்றது. முருகப்பெருமான் சூரபன்மன் ஏவிய



சூலத்தைப் பிடித்து வரும்படி கூறித் தன் கையிலிருந்த குலிசத்தை ஏவினார். குலிசப்படை சூலத்தின் முத்தலைகளையுங் கௌவிப் பிடித்துக் கொண்டு வந்து, அதை முருகப்பெருமானிடங் கொடுத்தபின், தான் முன்பிருந்த திருக்கரத்தில் இருந்தது. அமரரெல்லாம் தமது கரங்களைக் கூப்பிச் சிரசின்மேல் வைத்துச் சூரனைக் கொன்று தம்மைக் காத்தருளும்படி முருகப்பெருமானை வேண்டினர்.

இவ்வரலாற்றைக் கேட்போருக்கு முருகப்பெருமானுடைய கையிலி ருக்கும் ஆயுதங்களுக்கு இத்துணை ஆற்றலும் அறிவும் உண்டா என்னும் ஐயம் எழலாம். இறைவனுடைய திருமேனி அருள்வடிவமானது. 'அருளது சத்தியாகும் அரன்றனக்கு' என்றும் 'சத்திதன் வடிவேதென்னிற் றடையிலா ஞானமாகும்' என்றும் கூறுகின்றது சித்தியார். இறைவனது திருமேனியில் திருமுகம், மார்பு என்னும் இரண்டும் அங்கம். முகமும் மார்புந் தவிர்ந்த ஏனைய உறுப்புகள் பிரத்தியங்கம். அங்கத்துக்கு அணுக்கமாயிருப்பன உபாங்கம். புலித்தோல், கரியுரி முதலியன உபாங்கம். இறைவன் திருக்கரங்களிற் றாங்கும் சூலம் மான் மழு சிரசிற் சூடும் மதி முதலியன சாங்கம்.

"உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவிற் றோன்றும்
கருமமும் அருள ரன்றன் கரசர ணாதி சாங்கம்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்த னன்றே."

என்கின்றது சித்தியார்.

இதிலிருந்து இறைவன் திருக்கரங்களிற் றாங்கிய படைகளும் அறிவுள்ளவை என்பது பெறப்படும்.

## சூரன் சக்கரவாகமானான்

தம்மைக் காத்தருளும்படி தேவர்கள் வேண்டக் கேட்ட முருகப்பெருமான் ஈராயிரம் அம்புபூட்டி, சூரபன்மன் ஊர்ந்து செல்லும் சிங்கத்தின் சிரசின்மீது செலுத்துதலும் சிங்கம் வேதனை தாங்காது துள்ளிக் குதித்து மேலெழுந்து அரற்றி வீழ்ந்து இறந்தது. தன் ஊர்தி இறந்ததும் நிலத்திற் குதித்த சூரபன்மன் 'எனது தேரையும் சூலப்படையையும் அபகரித்ததோ டமையாது சிங்கத்தையுங் கொன்றுவிட்டு, எனது பகைவனாகிய இவன் வலியவன் போல் நிற்கின்றான். இவனையும் பூதர்களையும் ஏனைய தலைவர்களையும்

ஒப்பற்றதொரு பேருருக் கொண்டு விழுங்குவேன் என்றெண்ணி, இரண்டு சிறகுகள் பொருந்திய மகாமேருமலையை யொத்த பெரியதொரு சக்கரவாகப் பட்சி வடிவங்கொண்டான்.

சூரன் சக்கரவாகமாகிய தன் சிறகுகளால் மண்ணுலகம் முழுவதையும் மூடுவான்; சூரிய ஒளியை மறைப்பான். பூதர் குழுவிடைப் புகுந்து அவர்களைத் தாக்குவான். எண்ணற்ற பூதர்களைத் தன் சிறகுகளால் அடிப்பான். அவர்களைச் சொண்டினாற் கொத்தி விழுங்குவான். முருகப் பெருமானது தேரைச் சுற்றி வருவான்; தேர்ச் சாரதியைத் தாக்குவான். தேர் மொட்டினை ஒடிப்பான். குதிரைகளைக் குற்றுவான். அவற்றின் தலைகளைக் கொய்வான். வீரர்களைப் பிடிப்பான். அவர்களுடைய போர்க்கருவிகளைப் பறித்து முறித்து வீசுவான்.

முருகப்பெருமான் சினந்து வில்லை வளைத்து அனந்தகோடி அம்புகளைத் தொடுத்து சக்கரவாகமாகிய சூரபன்மன்மேல் விட்டார். சூரபன்மன் சிறகுகளால் அவ்வம்புகளை அடித்து முறித்து வீழ்த்தினான்; சொண்டினாற் கொத்தி வீசினான்; கால்களாற் பிடித்து முறித்தான். வான மெங்குஞ் சுற்றித் திரிந்தான். கடற்பரப்பெங்கும் பூமியெங்கும் விண்ணு லகத்திலும் பறந்து திரிந்த அவன் பூதகணத்தவரை அடித்தான்; சிலரைக் கொத்திக் கொண்டு சென்றான்.

## இந்திரன் மயிலானான்

இதைக் கண்ட முருகப்பெருமான் பறவையாய்ச் செல்பவனைத் தேருடன் தொடர்ந்து சென்று கொல்லுதல் பழியெனத் திருவுளங் கொண்டு இந்திரனை நோக்கினார். முருகப்பெருமானது அருட்பார்வையைக் குறிப்பா லுணர்ந்த இந்திரன் அழகிய நீண்ட பொறிகள் பொருந்திய பீலிகளையுடைய தோகை மயிலாகத் தோன்றி, முருகப்பெருமானைத் துதித்து இரண்டு கால்களையும் சிறகுகளையுமுடைய மரகத மலையொன்று நிற்பதுபோல முருகன் திருமுன் சென்று நின்றான்.

மயிலாகிய இந்திரன் பூமி பிளவுபட, மேரு மலையும் அதைச் சுற்றி யுள்ள மலைகளும் நிலைகுலைய, திக்கியானைகள் தியங்க, கடல்நீர் வற்ற, ஆதிசேடன் முதலிய பாம்புகள் அஞ்சத் தன் சிறகுகளால் மோதி முருகப்பெருமானை நோக்கி எம்பெருமானே, என்மீது பேரருள் வைத்தீர். அதனால் என் சிறுமை தீர்ந்தேன். தேவரீருடைய திருப்பாதங்களைத்



தாங்கும் பேறுபெற்றேன். உய்யும்வழி கண்டேன். இனி நிலையில்லாத இத்துன்ப வாழ்க்கையிலிருந்து விடுபடுவேன் என்று கூறி மகிழ்ச்சியுடன் நின்று,

"அல்லல்செய் தெமரை யெல்லாம் அருஞ்சிறைப் படுத்தி வீட்டிப்
பல்வகை யுலகை யாண்ட அவுணர்கோன் பறவை யாக்கை
செல்லுழிச் சென்று சென்று செருவினை இழைத்து வெல்வான்
ஒல்லையில் அடியேன் தன்மேல் ஏறுதி ஊர்தற் கென்றான்."

யாக்கை - உடம்பு, செரு - போர்.

முருகப்பெருமான் தேரிலிருந் திறங்கி இந்திரனாகிய மயில்மீதேறி அவுணனைத் தொடர்ந்து சென்றார். அதைக்கண்டு சக்கரவாகமாகிய சூரபன்மன் ஆரவாரத்துடன் சென்று மயிலாகிய இந்திரனைத் தாக்க அவனும் எதிர்த்துப் போரிட்டான். சக்கரவாகம் மயிலைப் பெரிதுந் துன்புறுத்தியது. அதைக்கண்ட முருகப்பெருமான் சக்கரவாகத்தின் உச்சியில் முகத்தில் காலில் மார்பினில் சிறைகளிற் படும்படி அம்புகளை ஏவினார். சூரபன்மன் பதைபதைத்து, அம்புகளை உதறி வீழ்த்தி, கோபங்கொண்டு, உலகெங்குங் கறங்குபோற் சுழன்று சென்றான். முருகப்பெருமான் சூரபன் மனைத் தொடர்ந்து சென்று போரிட்டார். சூரபன்மன் கோபித்து முருகப் பெருமானது திருக்கரத்திலிருந்த வில்லை முறிக்க வெண்ணி அவரிடஞ் சென்றான். அதைக்கண்ட முருகப்பெருமான் தன் கையிலிருந்த வாளை வீசிச் சூரன் கொண்ட பறவை வடிவத்தை இரண்டு துண்டுகளாக வெட்டினார். அரிபிரமன் முதலிய தேவர்கள் ஆனந்தக் கூத்தாடினர்.

## சூரனது மாயவடிவங்கள்

அதன்பின் சூரபன்மன் பூமி வடிவங்கொண்டு அண்டமுகட்டைத் தொடும்படியாக உயர்ந்து நின்றான். முருகப்பெருமான் ஏழு அம்புக்களைத் தொடுத்து 'நீங்கள் ஏழு கடலென்னுந் தன்மையைப் பொருந்தி விரைந்து சென்று சூரன் கொண்ட பூமி வடிவத்தை அழியுங்கள்' என்றான். அவ்வம்புகள் சப்த சமுத்திரங்கள் போலாகிச் சூரன் கொண்ட மண்வடிவத்தை அழித்தபின் போர்க்களத்தில் நின்று ஐந்தொழில் ஆடல் புரியும் முருகப்பெருமானிடந் திரும்பிச் சென்றன.

சூரபன்மன் நீர் வடிவங்கொண்டு உகாந்தகாலத்தில் ஏழு சமுத்திரங்களும் ஒன்றாகி வையகத்தையும் வானகத்தையும் உண்பதற்குப் பொங்கி எழுவதுபோற் பொங்கி எழுந்து நின்றான். முருகப்பெருமான் நூறு அம்பு களைத் தொடுத்து, ஊழித் தீபோற் சென்று சூரன் கொண்ட நீர் வடிவத்தை அழித்து வாருங்கள் என்று அவற்றுக்கு ஆணையிட்டார். முருகப்பெருமான் ஏவிய பாணங்கள் நீர் வடிவத்தை அழித்ததும் சூரபன்மன் அக்கினி வடிவங்கொண்டு அண்டகோளம் வரை உயர்ந்து நின்றான்.

முருகப்பெருமான் ஆயிரம் அம்புகளை எடுத்து, சூறைக்காற்றைப் போற் சென்று சூரபன்மன் கொண்ட மாய வடிவத்தை அழித்து வருமாறு கூறி அவற்றைச் செலுத்தினார். அவ்வம்புகள் சூரன் கொண்ட பொய் வடிவத்தை அழித்தொழித்து அண்டர் நாயகன் பாங்கரிற் சென்றன.

சூரபன்மன் கண்ட மாருதம் போலாகி ஆரவாரித்தான். முருகப்பெருமான் ஆயிரம் அம்புகளை எடுத்து 'நீங்கள் பாம்புகளாகிச் சென்று சூரபன்மனது ஆற்றலை அழியுங்கள்' என்று கூறி ஏவினார். அவை முருகப்பெருமான் பணித்தவாறே சூரபன்மனது சண்ட மாருத வடிவத்தை அழித்தபின் முருகப்பெருமானிடஞ் சென்றன.

காணப்படுகின்ற எமது தூல தேகத்துக்குள் காணப்படாத இன்னொரு உடம்பு உண்டு. அது சூக்கும தேகம் எனப்படும்.

சூக்கும தேகம் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் தன் மாத்திரைகள் ஐந்தும் மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் மூன்றுஞ் சேர்ந்த எட்டுத் தத்துவங்களால் ஆக்கப்பட்டது. அதனால் அது புரியட்டக உடம்பு என்ற பெயராலும் அழைக்கப்படும்.

சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐம்புலன்கள் வேறு. தன் மாத்திரைகள் வேறு. தன் மாத்திரைகளிலிருந்து பூதங்கள் தோன்றும். சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னுந் தன் மாத்திரைகளிலிருந்து முறையே வெளி, வாயு, தீ, நீர், நிலம் என்னும் பூதங்கள் தோன்றும். தன் மாத்திரைகள் பஞ்சபூத மூலங்கள்.

நாம் இறக்கும்போது எமது உயிர் உடலை விட்டுச் சூக்கும உடம போடு புறப்பட்டுச் செல்லும். அருவமாயும் உருத்திரியாமலும் பல்வேறு உடம்புகளைத் தோற்றுவிக்கும் யோக்கியதா சத்தியுடையதாயுமுள்ள இச் சூக்கும தேகத்திலிருந்து இறைவன் ஒவ்வொரு உயிருக்கும்



அவ்வுயிர் செய்த வினைக்கீடாக ஏழுவகையாகப் பிறக்கும் எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்களைக் கொண்ட உடம்புகளைப் படைத்துக் கொடுக்கிறார்.

சூக்கும உடம்பு அழியாதிருக்க அதிலிருந்தே தூலதேகம் தோன்றுவதால் பிறவிப் பெருங்கடலைக் கடந்து முத்தியடையும் உயிருக்கு தூலதேகம் மாத்திரமன்றிச் சூக்கும தேகமும் அழிந்து போகவேண்டும்.

சூரபன்மன் மண் முதலிய பூதவடிவங்களை எடுத்ததும் அவை முருகக் கடவுளால் அழிக்கப்பட்டதும் சூக்கும தேகம் அழிக்கப்பட்டதைக் குறிக்குமென்பர். அதனால், இதுபற்றி, கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்களின் கூற்றை இவ்விடத்திற் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். அவருடைய கூற்று வருமாறு: "உயிரின் சூக்கும சரீரமும் முத்தி நிலையில் அழிந்தே தீரும் நிலை கந்தபுராணம் சூரபன்மன் வதைப் படலத்தில் 392 முதல் 409 ஈறாக உள்ள செய்யுட் பகுதியில் ஒருவாறு குறிப்பிடப்பட்டிருக்கும் பாங்கு கருதத்தகும்.

போரிற் சூரபன்மன் கொண்ட மாயை சார்ந்த தேகவடிவிற் கடைசியாக உள்ளது சக்கரவாக வடிவம். அது சுப்பிரமணியர் திருக்கைவாளால் துணிக் கப்பட்டமை தூலதேக அழிவைக் குறிக்கும். அதன்மேல் அவன் பிருதி வியாகி அழிபட்டு, தொடர்ந்து முறை முறையே அப்பு, தீ, வாயு ஆதி களாய்த் தோன்றித் தோன்றி அழிபட்டொழிந்த செய்தி அவன் சூக்கும தேகம் அழிக்கப்பட்டவாற்றையே குறித்ததாகக் கொள்ளுதற் கிடமுண்டு." (சிவஞானசித்தித் திறவுகோல் பக்கம் 167)

## மீண்டும் மாயப்போர்

இவ்வாறு போரிட்ட சூரபன்மன் பின்பும் மாயப்போர் புரியக்கருதி ஒரு பக்கத்தில் பிரமா, விட்டுணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளைப் போல் வடிவங்கொண்டு வந்தான். ஒருபக்கத்தில் இந்திரனைப் போல வந்தான். ஒருபக்கத்தில் தீயைப் போல வந்தான். ஒரு பக்கத்தில் காற்றைப் போல வந்தான். ஒரு பக்கத்திற் கடலைப் போல வந்தான். ஒரு பக்கத்தில் இருள் போல வந்தான். ஒரு பக்கத்தில் இடிபோல வந்தான். ஒரு பக்கத்தில் மலைபோல வந்தான். ஒரு பக்கத்தில் தனது சொந்த வடிவோடு வந்தான். ஒரு பக்கத்திற் கதிரவனைப் போல வந்தான். ஒரு பக்கத்தில் பல படைகள் ஒன்று திரண்டு வருவது போல வந்தான்.

ஒரு பக்கத்தில் திக்கு யானைகளைப் போல வந்தான். ஒரு பக்கத்திற் சிங்கேறு போல வந்தான். ஒரு பக்கத்திற் சரபப் பறவை போல வந்தான். ஒரு பக்கத்தில் தாரகாசுரனைப் போல வந்தான். ஒரு பக்கத்திற் பானுகோபனைப் போல வந்தான். ஒரு பக்கத்தில் தன் மக்களாகிய மூவாயிரவரைப் போல வந்தான். ஒரு பக்கத்தில் தருமகோபனைப் போல வந்தான். இதைக் கண்ட தேவர்கள் மனந்தளர்ந்து அங்குமிங்கும் ஓடினர்.

முருகப் பெருமான் ஆயிரகோடி அம்புகளை எடுத்து, 'நீங்கள் போய் சூரபன்மன் கொண்ட உருவங்கள் எல்லாவற்றையுமெடுத்து அவனுடைய மாயத்தோற்றங்களை அழித்து வாருங்கள்' என்று கூறிவிட்டார். அவ்வம்புகள் சூரபன்மன் கொண்ட ஒவ்வொரு உருவத்துக்கும் ஏழுமடங்கு உருவமெடுத்து அவனுடைய மாயவடிவங்கள் அனைத்தையும் அழித்தன. சூரபன்மன் முன்பு போற்றனித்து நின்றான்.

## திருப்பெருவடிவம்

முருகப்பெருமான் சூரபன்மனை நோக்கி,

"வெம்புயல் இடையிற் றோன்றி விளிந்திடும் மின்னு வென்ன
இம்பரில் எனது முன்னம் எல்லையில் உருவங்கொண்டாய்
அம்பினில் அவற்றை யெல்லாம் அட்டனம் அழிவி லாத
நம்பெரு வடிவங் கொள்வம் நன்றுகண் டிடுதி என்றான்."

புயல் - முகில், விளிந்திடும் - அழியும், இம்பரில் - இவ்வுலகில், அட்டனம் - அழித்தனம்.

'காண்பாரார் கண்ணுதலார் காட்டாக்காலே' என்கிறது தேவாரம் (6-95-3)

"காண்பார் யார்கொல் காட்டாக் காலெனும்
மாண்புரை உணர்ந்திலை......"
என்கின்றது இருபாஇருப.்.து (2.31-32)

"கூறிமற் றினைய தன்மை குரைகடல் உலகந்திக்கு
மாறிலாப் புவன மண்டம் வானவர் உயிர்கள் யாவும்
ஆறுமா முகத்து வள்ளல் மேனியில் அமைந்த தன்றி
வேறிலை யென்ன வாங்கோர் வியன்பெரு வடிவங்கொண்டான்"



"செஞ்சுடர் அநந்த கோடி செறிந்தொருங் குதித்த தென்ன
விஞ்சிய கதிர்கான்றுள்ள வியன்பெரு வடிவை நோக்கி
நெஞ்சகந் துளங்கி விண்ணோர் நின்றனர்....."

சுடர் - சூரியர், விஞ்சிய - மிகுந்த.

தவம் செய்யாத காரணத்தாற் போலும் தேவர்கள் திருப்பெரு வடிவத்தைக் கண்டு அஞ்சினர்.

"இறுதியும் முதலும் இல்லா இப்பெரு வடிவந் தன்னைக்
கறைவிட முறளுஞ் சூரன் கண்டு விம்மிதத்தில் நிற்ப
அறிவரும் உணர்தல் தேற்றா ஆறுமா முகத்து வள்ளல்
சிறிதுநல் லுணர்ச்சி நல்க இனையன செப்பலுற்றான்".

அறிவர் - ஞானிகள், உறளும் - போலும்.

முருகப்பெருமானது திருப்பெரு வடிவத்தைத் தேவர்களுங் கண்டனர். சூரபன்மனுங் கண்டான். தேவர்கள் அவ்வடிவத்தைக் கண்டு அஞ்சி நடுங்கினர். சூரன் அவ்வடிவத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தான். அதனால் அருள்வள்ளலாகிய முருகப்பெருமான் இரண்டு பகுதியினருக்கும் வெவ்வேறு விதமாக அருள்புரிய வேண்டியவரானார். தேவர்களுக்கு அச்சத்தை நீக்கினார். சூரபன்மனுக்கு அவன் ஆச்சரியத்தோடு பார்த்த வடிவத்தை அனுபவித்தற்குரிய அறிவைக் கொடுத்தார். இறைவன் எல்லா உயிர்களுக்கும் ஒரே விதமாக அருள்புரியாது ஒவ்வொரு உயிருக்கும் வேறு வேறு விதமாக அருள் புரிவதற்குக் காரணம் அவற்றின் பக்குவ வேறுபாடென்பதை விளக்குகின்றது இந்நிகழ்ச்சி.

'இறுதியும் முதலும் இல்லா' என்னும் முதலையுடைய பாடலில் இடம்பெறும் 'சிறிது நல்லுணர்ச்சி நல்க' என்னுஞ் சொற்றொடர் முக்கியமானது. மலபரிபாகம் எய்தப்பெற்ற சூரபன்மன் சத்திநிபாதன் ஆயினான் என்பதைச் சுட்டுகின்றது இச்சொற்றொடர். இதுவரை சூரன் செல்லுமிடமெங்குஞ் சென்று அவனைப் போகங்களில் ஆழ்த்தி மலபரிபாகம் வரச்செய்த திருவருள், இனிச் சிறிது சிறிதாகச் சூரபன்மனுக்கு முன்னிலையாகி அவனுக்கு அருள்புரியும் போலும்.

சத்திநிபாதம், மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரமென நான்கு வகைப்படும். நான்கிலொரு பங்கு மலசத்திதேய நான்கிலொரு பங்கு அருட்சத்தி பதிதல் மந்ததரசத்திநிபாதம். நான்கில் இரண்டு பங்கு

மலசத்திதேய நான்கில் இரண்டு பங்கு அருட்சத்தி பதிதல் மந்த சத்திநி பாதம். முக்காற் பங்கு மலசத்திதேய முக்காற்பங்கு அருட்சத்தி பதிதல் தீவிர சத்திநிபாதம். மலசத்தி முழுவதும்தேய முழுமையாக அருட்சத்தி பதிதல் தீவிரதரசத்திநிபாதம்.

'சிறிது நல்லுணர்ச்சி நல்க' என்று கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் கூறியதனால் சூரபன்மன் மந்ததர சத்திநிபாதன் ஆனானெனக் கொள்க.

முருகப்பெருமானுடைய திருப்பெரு வடிவத்தைக் கண்டபோது அவனுடைய சிந்தனையில் முருகப்பெருமானைப் பற்றிய பல்வேறு சிந்தனைகள் அலை அலையாக வந்தன.

"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ".

என்றெண்ணிய சூரபன்மன் அவனருளாலே அவன்தாள் வணங்கினான்.

கோலம் - அழகு, மஞ்ஞை - மயில், அயன் - பிரமா, பரிசு - இயல்பு.

தூதனாக வந்த வீரவாகு விருப்பு வெறுப்பற்ற பராபரப் பொருளாகிய சிவபெருமானே முருகப்பெருமானாகத் தோன்றினாரென்று சொன்னதை அப்போது நான் நம்பவில்லை. எனது ஆட்சிக்குட்பட்ட அண்டங்கள் அனைத்தும் ஆறுமுகப்பெருமானது பாதத்திலுள்ள உரோமம் ஒன்றிலேயே தங்கியிருக்கின்றன.

தேவர்களையும் முனிவர்களையும் ஏனையோரையும் எல்லா உலகங் களையும் தன்னிடத்திற் காட்டி நிற்கும் இப்பெருவடிவம் முழுவதையுங் காணக்கூடியவர் யார்? உடலெங்கும் எண்ணிறந்த விழிகளைக் கொண்டி ருப்பவர்களுக்கும் இப்பெருவடிவத்தைக் காண அனந்தகோடி கற்பகாலம் வேண்டும்.

இப்பெரு வடிவத்தின் அழகும் ஒளியும் சிறப்பும் இளமையும் வேறு யாருக்கு உண்டு? பலமுறை பார்த்தாலுந் தெவிட்டாது பார்க்கப் பார்க்க இன்பமளிக்கின்றது இவ்வடிவம்.

'போர்க்களத்தில் என்னை எதிர்த்து நிற்பவனுடைய இந்தப் பெருவடி வத்தைப் பார்க்கும்போது எனக்கு அச்சமே ஏற்பட்டிருக்க வேண்டும்.



பார்ப்பவர் எவருக்கும் அச்சத்தை உண்டாக்கும் இவ் வடிவத்தை எவ ராவது பார்த்துக்கொண்டு நிற்பார்களா? எந்தத் தேவர் தான் இவ்வடிவத்தைப் பார்த்துக் கொண்டிருப்பர்! நான் இவ்வடிவத்தைப் பார்க்கின்றேன். அதனால் நான் அழியாத சிறந்த வரத்தைப் பெற்றிருக்கின்றேன் என்பது தானே உண்மை' என்று எண்ணினான் சூரபன்மன்.

சிங்கமுகாசுரனும் இரணியனும் செங்கையில் வேலோன் தன்னைச் சிறுவனென் றெண்ணாதே யென்று கூறியதை நான் இப்பொழுது தானே உண்மையென் றுணர்கின்றேன். அவர்கள் சொன்ன தெல்லாம் உண்மை. அவர்கள் முருகப்பெருமானைப் பங்கயன் முதலோர் காணாப் பரமனென்று சொன்னார்கள். அதுவும் உண்மை என்றெல்லாம் எண்ணினான் சூரபன்மன்.

'ஆண்களில் அழகிற் சிறந்தவன் காமன். ஒரு காமனின் அழகு மாத்திரமல்ல ஆயிரகோடி காமர்களின் அழகை ஒன்றாகத் திரட்டினாலும் செவ்வேட் பெருமானின் நிர்மலமாகிய ஒரு திருவடியின் எழிலுக்கு இணை யாகுமோ! இணையாகாதே. அப்படியானால், முருகப் பெருமானுடைய திருப்பெரு வடிவத்துக்கு உவமை கூறவல்லவர் யார்? என்றெண்ணினான் சூரன்.

"ஆயிர கோடி காமர் அழகெலாந் திரண்டொன்றாகி
மேயின வெனினும் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா தென்றிடில் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்"

என்கின்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

காமர் - மன்மதர், சரணம் - பாதம்.

சூரபன்மனுக்கு முருகப்பெருமான் மீது கொண்ட கோபம் நீங்கியது. போர் செய்யவேண்டுமென்னும் மனவெழுச்சி குறைந்தது. அவனுடைய உரோமங்கள் சிலிர்த்தன. கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. முருகப்பெருமான் மீது அன்பு பிறந்தது.

முருகப்பெருமானை நினைக்க நினைக்க என் நெஞ்சம் நெகிழ்கின்றதே! என் என்பெல்லாம் உலையிடை யிட்ட மெழுகுபோல உருகுகின்றனவே! இதென்ன அதிசயமென் றெண்ணினான் சூரபன்மன்.

"போயின அகந்தை போதம் புகுந்தன வலத்த தான
தூயதோர் தோளுங் கண்ணுந் துடித்தன புவனமெங்கும்
மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படுகின்ற விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டேன் நற்றவப்பயனீ தன்றோ."

என்று எண்ணினான் சூரபன்மன்.

போதம் - ஞானம். மேயின - பொருந்திய.

## சூரனது மனம் மாறியது

எனது கால்கள் எம்பெருமானை வலம் வருதல் வேண்டும். கைகள் அவனைத் தொழவேண்டும். தலை அவனைத் தாழ்ந்து வணங்கவேண்டும். எனது நா அவனைத் துதித்துப் பாடுதல்வேண்டும். இனிமேல் நான் தீமை செய்வதைக் கைவிட்டு இவனுக்கு அடிமையாக வாழுதல் வேண்டும். இவ்வாறு சூரபன்மனுடைய நெஞ்சம் நினைத்தது ஆனால்! நினைத்ததைச் செய்ய விடாமல் மானம் தடுத்தது.

தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து முருகப்பெருமானை வணங்கி, இந்த உடலோடு கூடிய உயிரைப்பேணி மற்றையோர் என்னைக் கண்டு எனக்காக இரங்கும் வண்ணம் இழிந்த வாழ்க்கை வாழ்வது எனக்கேற்றதா? இவ்வாறு வாழ்ந்தால் ஆயிரகோடி அண்டங்களிலும் பரவிய எனது புகழ் அழிந்து போகாதா? எனது வீரம் தொலைந்து போகாதா? என்றெல்லாம் எண்ணினான் சூரபன்மன்.

இந் நிலையில் முருகப் பெருமான் திருப்பெருவடிவத்தை நீத்து மயில்மீதிருந்த திருக்கோலத்தோடு தோன்றினார். சூரபன்மனுடைய அறிவை மறைத்தார். அவனுக்கு முன்பிருந்தது போன்ற மனநிலையை வரச்செய்தார். இது எம்பெருமான் ஆன்மாக்களுக்காகச் செய்யும் ஐந்தொழில்களில் ஒன்றாகிய மறைத்தல் உபகாரம். சூரபன்மன் முன்போல் கோபமும் பகைமையும் கொண்டான்.

"தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின..."

என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகின்ற நிலை சூரபன்மனுக்கு ஏற்பட்டது.



"அத்தகு காலை தானே அவுணர்கோன் உணர்ச்சி நீங்கிச்
சித்தம திடையே தொல்லைச் சீற்றமும் இகலு முற்ற
மெய்த்தகு குழவித் திங்கள் விண்ணெறி செல்லச் செல்லும்
எத்திசை யிருளும் அன்ன தகன்றுமி எழுந்ததே போல்."

என்கின்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

பிறைச் சந்திரன் வானத்திற் றோன்றும் போது இருள் சிறிது நீங்கி அது விரைவில் மறைய மீண்டும் இருள் தோன்றுவது போல சூரபன்மனுக் குண்டான சிறிதளவு நல்லுணர்வு நீங்க அவன் பழமைபோல் அகந்தை கொண்டான். அவனது சிந்தனை மாறியது.

## மீண்டும் மாயப்போர்

சூரபன்மனது சிந்தையிற் சினம் பொங்கியது 'குழந்தை உருவில் இருக்கும் இந்தக்கள்வன், என்னை எதிர்த்துப் போர்புரிய முடியாமை காரணமாக மாயா சாலத்தால் என்னை மயக்கி விட்டான். நான் இப்போது மயங்கத் தெளிந்து விட்டேன். இனி எனக்கு ஒப்பாவார் யார்? என்றுமே அழியாத வச்சிர தேகத்தைப் பெற்ற நான் மனமழியலாமா? இந்தக்குமரனைப் பின்பு வெல்லலாம். அதற்கு முன் இந்தப்போரை மூட்டிய தேவரையெல்லாங் கொன்று எனது கோபத்தைப் போக்குவேன்' எனத் துணிந்தான்.

மாயை செய்ய வல்லதொரு மந்திரத்தை உச்சரித்து, சூரபன்மன் சூரியனும் மருளுமாறு இருள் வடிவங் கொண்டு பூமியெங்கும் வானமெங்கும் நிறைந்து நின்று ஆரவாரஞ் செய்தான். இந்த இருள் வடிவத்தைக் கண்ட வானவர் கலங்கினர்.

இருள்வடிவத்துட் புகுந்த சூரபன்மன், வரிசை வரிசையாயமைந்த மலைச் சிகரங்களைப் போன்ற பல தலைகளும் எண்ணற்ற கரங்களுங் கொண்டதொரு உருவெடுத்து, தேவர்களைப் பிடித்து உண்ணக்கருதி விண்ணிற் சென்றான். தேவர்கள் வருந்தித் திக்குத்திசை தெரியாமற் சிதறியோடினர். ஓடிக்களைத்து இறுதியில்.

"நண்ணினர்க் கினியா யோலம் ஞான நாயகனே யோலம்
பண்ணவர்க் கிறையே யோலம் பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணுதற் கரியா யோலம் யாவையும் படைத்தா யோலம்
கண்ணுதற் பெருமா னல்குங் கடவுளே யோல மோலம்."

"தேவர்கள் தேவே ஓலம் சிறந்த சிற் பரனே ஓலம்

மேவலர்க் கிடியே யோலம் வேற்படை விமலா ஓலம்

பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்

மூவரும் ஆகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்." என்று கூறிக் கொண்டு முருகப்பெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர்.

பண்ணவர் - முனிவர், ஓலம் - அடைக்கலம், மேவலர் - பகைவர்.

"சூரபன்மன் எம்மை விழுங்க வருகின்றான். எமக்குத் தப்பியோடுவ தற்குரிய வல்லமை இல்லை. இனிமேல் நாம் எவ்வாறு உயிர் பிழைப் போம்? ஐயனே, சிறிதுங் காலந்தாழ்த்தாது சூரனது உயிரை உண்டு எமக்கு எம் ஆவியை அருளுக." என்று தேவர்கள் முருகப் பெருமானிடம் முறையிட்டனர். மயில்வடிவங் கொண்டு முருகப் பெருமானைத் தாங்கி நின்ற இந்திரனும் அவரைத் துதித்து, சூரபன்மனுடைய உயிரைப் பறிக்கு மாறு வேண்டினான்.

## வேல் இருளை அழித்தது

முருகப்பெருமான் தனது கரத்திலிருந்த வேலை நோக்கி, சூரபன்ம னுடைய மார்பைப் பிளந்து வரும்படி கூறினார். முருகப்பெருமான் ஏவிய இருதலைகொண்ட வேற்படை ஆயிரகோடி சூரியப்பிரகாசத்தோடு விளங்கித் தோன்றி, தீச்சுவாலைகளை உமிழ்ந்தவாறு செல்ல சூரபன்மன் கொண்ட இருள் வடிவம் முற்றும் விரைவாக அழிந்தது.

"ஏயென முருகன் தொட்ட இருதலை படைத்த ஞாங்கர்

ஆயிர கோடி என்னும் அருக்கரிற் நிகழ்ந்து தோன்றித்

தீயழற் சிகழி கான்று சென்றிட அவுணன் கொண்ட

மாயிருள் உருவம் முற்றும் வல்விரைந் தகன்ற தன்றே."

என்கின்றது கந்தபுராணம்.

ஆகாமியவினையும் ஞானமும் இருளும், ஒளியும் போன்ற தன்மை யுடையன. விளக்கின் முன் இருள் அழிந்து போவது போல, ஞானாக் கினியினாலே ஆகாமியம் எனப்படும் ஏறுவினை அழிந்து போகும்.

"தொல்லையில் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டேல்

அல்லொளி புரையும் ஞானத் தழலுற அழிந்துபோமே."

என்கின்றது சிவப்பிரகாசம். (89)

அல் - இருள்



"....இங்கு இனிச் செய் கன்மம் மூலமலம் ஞானத்தால் இடிப்பன்" என்கின்றது. சித்தியார் (8-10) அதனால் வேற்படை இருள் வடிவத்தை அழித்த நிகழ்ச்சி ஆகாமிய கன்ம அழிவைக் குறிக்குமெனக் கொள்ளலாம்.

## சூரன் மாமரமானான்

சூரபன்மன், 'அழியா வரம் பெற்ற என்னை இவனுடைய வேல் என்ன செய்யும்? எல்லாக் கடல்களையும் எல்லாத்திசைகளையும் மேலுலகங் களையும் கீழுலகங்களையும் பிரமா முதலாகவுள்ள எல்லா உயிர்களையும் அழித்து அதன் பின் இவனையும் அழிப்பேன்' என்றெண்ணி நடுக்கடலுக்குச் சென்றான்.

"வன்னியின் அலங்கல் கான்று வான்தழை புகையின் நல்கிப்

பொன்னென இணர்கள் ஈன்று மரகதம் புரையக் காய்த்துச்

சென்னிற மணிக ளென்னத் தீம்பழங் கொண்டு கார்போல்

துன்றுபல் கவடுபோக்கிச் சூதமாய் அவுணன் நின்றான்."

வன்னி - நெருப்பு, அலங்கல் - தளிர், தழை - இலை, இணர் - பூங்கொத்து, மரகதம் - பச்சைநிறமணி, புரைய - போல, கார் - முகில், கவடு - கொம்பர், சூதம் - மாமரம்.

மாமரவடிவாகிய சூரபன்மன் வேர்களாற் பாதாளம் வரை ஊடுருவி, அண்டகோளத்தின் உச்சிவரை உயர்ந்து, நிலம் முழுவதும் கடல்களெங்கும் விண்ணிலும் நிழல் பரப்பி, சூரிய சந்திரரும் அளகாபுரியை ஆளுகின்ற குபேரனும் திக்கியானைகளும் இயமதர்மனும் பிரமாவும் திருமாலும் இந்திரனும் வீரலக்குமியும் முருகப்பெருமானது கொடியில் சேவலாய் நின்று கூவிய அக்கினிதேவனும் வாயுதேவனும் அஞ்சும்படியாக நின்றான்.

அது காரணமாக ஆதிசேடன் நிலை தளர்ந்தான். அட்ட வசுக்களும் அச்சங் கொண்டு கைகளை உதறினர். சூரியனது குமாரராகிய அசுவினி தேவர்களுக்கு அச்சங்காரணமாக வியர்வை யுண்டானது. மங்கையர் அச்சமடைந்து தமது கயல் விழிகளைக் கைகளாற் பொத்தினர்.

வருணன் கலங்கினான் கடல்கள் நிலைபெயர்ந்தன. ஆலகால விடமும் அஞ்சியது. சூரன் கொண்ட மாமர வடிவம் அசைந்தது. அதனால் ஆதிசேடன் பாரம் பொறுக்க முடியாமல் வருந்தினான். சூறைக்காற்று வீசியது. பூமி அசைந்தது. பாதாள உலகங்கள் பொடிபட்டன. பூமியைத்

தாங்கும் ஆதி கூர்மம் புரண்டது. திக்கியானைகள் இறந்தன. கடல்கள் யாவும் கரைகடந்து சென்று ஒன்றாயின. உயிர்க் கூட்டங்கள் அழிந்தன. மலைகள் புரண்டன.

நட்சத்திரங்கள் உதிர்ந்தன. கிரகங்கள் அஞ்சி ஓடின. சூரியன் செல்லும் வழிதெரியாது திகைத்தான். சந்திரன் தனது ஊர்தியை விட்டு இறங்கிச் சென்றான். சில தேவர்கள் அச்சத்தினால் மகாமேரு மலைக்குச் சென்று ஒளித்தனர். வேறு சிலர் திருக்கைலாயத்துக்குச் சென்று கைலாச பதியிடந் தஞ்சமடைந்தனர்.

சுவர்க்கலோகம் முழுவதும் அழிந்தது. அதற்கப்பாலுள்ள முனிவர்கள் வாழுந் தவலோகமும் பிரமதேவருடைய சத்தியலோகமும் திருமாலுடைய வைகுந்த லோகமும் பிளந்து வீழ்ந்தன. அண்ட கூடந் தகர்ந்தது.

## வேற்படை சென்றது

இவற்றையெல்லாங் கண்ட வேற்படை கொடுஞ்சினங் கொண்டு, சர்வ சங்காரஞ் செய்யச் செல்லும் மகா உருத்திரமூர்த்தியைப் போலச் சென்றது. வேற்படை சென்றபோது தோன்றிய தீப்பொறிகள் பூமியெங்கும் பரந்து கடல்களையும் எட்டுத் திக்குகளையும் வானத்தையுஞ் சூழ்ந்தன. திருக்கைலாசபதி எழுந்தருளியிருக்கும் கைலையங்கிரியைத் தவிர்ந்த மற்றெல்லா மலைகளிலும் அண்ட கோளச் சூழலிலும் தீப்பற்றி எரிந்தது.

நிர்மலராகிய சிவபெருமான் தனது கண்டத்திற் பொருந்திய நஞ்சை எடுத்து, நெற்றிக் கண்ணிற் பொருந்திய தீயிற் காய்ச்சி இடக்கரத்தில் ஏந்திய தீயிற் றோய்த்துச் செய்தது போன்ற வேற்பெருமான் கண்டோர் அஞ்சும்படியாகச் சென்று அறியாமையோடு கூடிய கொடிய சூரபன்மன் கொண்ட மாமரவடிவத்தை அடியோடு வெட்டி அழித்தார்.

"விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கனல் உறுத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயில் தோய்த்து முன்இயற்றி யன்ன
உடம்பிடித் தெய்வம் இவ்வா றுருகெழு செலவி னேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே."

என்கின்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

பாணி - கரம், உடம்பிடி - வேல்.

மாமரவடிவாய் நின்ற சூரபன்மன் வெட்டுண்டு அரற்றி வீழ்ந்தானாயினும் முன்செய்த தவத்தின் பயனால் இறந்திலன்.



"......அரற்றொடு குறைந்து வீழ்ந்தும்
வீடிலன் என்ப மன்னோ மேலைநாள் தவத்தின் என்றால்
பீடுறு தவமே யன்றி வலியது பிறிதொன் றுண்டோ?"

என்று கேட்கின்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

வீடிலன் - இறந்திலன், பீடு - பெருமை.

மாமரவடிவம் வெட்டுண்டு வீழ்ந்த போதும் இறவாத சூரபன்மன் மிகுந்த கோபங்கொண்டு தனது சொந்தவடிவத்தை எடுத்து, உடைவாளை உருவிக்கொண்டு மீண்டும் போர் செய்யக்கருதி முருகப்பெருமானை நோக்கிச் சென்றான்.

வேற்படை அவனுடைய மார்பைப் பிளந்து இரண்டு கூறுகளாக்கிக் கடலில் வீசிவிட்டு, வேதங்கள் ஒலிக்க விண்வெளியிற் சென்று, தேவர்கள் போற்றித் துதித்துப் பொழிகின்ற பூமழையினூடு புகுந்து, அக்கினி வடிவம் நீங்கி, அருளுருக் கொண்டு ஆகாய கங்கையில் நீராடியபின் மீண்டு வந்து முருகப் பெருமானது திருக்கரத்தில் வீற்றிருந்தது.

## சேவலும் மயிலும்

வேற்படை பிளந்த பின்பும் சிவபெருமான் கொடுத்த வரத்தினால் அழியாத சூரபன்மன் தன்னுடலின் ஒருகூறு சேவலும் மறுகூறு மயிலுமாகிச் சினங்கொண்டு போரிடக் கருதி முருகப்பெருமானுக்கு முன் சென்றான்.

அப்போது அவன் தீவிரதர சத்திநிபாதனல்லன். அவனுக்கு யான் எனதென்னுஞ் செருக்கறவில்லை. மீளா அடிமையாய் முருகப்பெருமானுக்கு ஆட்படவேண்டு மென்னும் எண்ணம் ஏற்படவில்லை. ஆனாலும் முற்பிறவிகளிற் செய்த தவத்தின் பயனால் சூரபன்மன் முருகப்பெருமானுக்கு முன் சென்றான்.

"ஆட்படு நெறியிற் சேர்த்தும் ஆதியின் ஊழ்தந் துய்க்கத்
தாட்படை மயூரமாகித் தன்னிக ரில்லாச் சூரன்
காட்புடை உளத்த னாகிக் கடவுளர் இரியல் போக
ஞாட்பியல் செருக்கில் வந்தான் ஞானநா யகன்தன் முன்னம்."

என்கின்றது கந்தபுராணம்.

தாட்படை - சேவல், மயூரம் - மயில், காட்பு - வெறுப்பு, இரியல் போதல் - அஞ்சியோடுதல், ஞாட்பு - போர்.

முன்பு செய்த தவத்தின் பயனால் ஆதியில் ஊழ் தந்துய்க்க இறைவனை நோக்கிச் சென்ற ஒருவர் கண்ணப்பர். வேட்டைக்குச் சென்ற அவர் காளத்தியப்பரைக் காணமுன்பே, இறைவனின் அருள்நோக்கத்தைப் பெற்று அன்புருவானார். காளத்தி மலையில் ஏறும்போதே கண்ணப்பர் தீவிரதர சத்திநிபாதராயினார்.

"திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணாமுன்னே

அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்க மெய்தித்

தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்

பொங்கிய வொளியி னீழற் பொருவிலன் புருவ மானார்."

என்கின்றார் சேக்கிழார்.

"பண்டை நற்றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்தி பண்ணுந்

தொண்டரைத் தானே தூய கதியினிற் றொகுப்பன்"

என்கின்றது சித்தியார்.

பண்டை நற்றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்தி பண்ணிக் கதியடைந்த தொண்டருக்குச் சிறந்த உதாரணம் கண்ணப்பர்.

சூரபன்மன் பண்டை நற்றவமுடையவன். இப்பிறப்பிலும் பரமனைப் பத்தி செய்தவன். இப்பிறப்பில் அவன் செய்த தவம் இறப்பில் தவமல்ல, அழிந்து போகுந் தவம். அத்தவத்தின் பயன், சிவபெருமானிடம் பெற்ற வரத்தின் பயனை அனுபவித்ததோடு அழிந்து போனது. சேவலும் மயிலு மாய் முருகப்பெருமானுக்கு முன்சென்ற போதும் சூரபன்மன் ஆணவ முனைப்புடன் சென்றான்; கண்ணப்பரைப் போலச் சத்திநிபாதராகச் செல்லவில்லை. ஆணவ முனைப்புடன் சென்ற அவனுக்கு முருகப்பெருமான் கதியளித்தாரென்றால் அவன் செய்த முற்றவம் கண்ணப்பன் செய்த முற்றவத்திலும் பார்க்க எவ்வளவு சிறப்புடையதாதல் வேண்டும்! அதனாற் போலும், சூரபன்மன் செய்த தவத்தைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் 'அவன் தவம் செப்பற் பாற்றோ' என்று சொல்லி அடிக்கடி வாயூறுகிறார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

புள் வடிவாகச் சென்ற சூரபன்மனை முருகப்பெருமான் அருட் கண்ணால் நோக்கினார். எம்பெருமான் மீது கொண்ட பகைமை உணர்வு அவனை விட்டகன்றது. சூரபன்மனுக்குத் தெளிவு பிறந்தது.



முருகப்பெருமான் மெய்யுணர்வு பெற்று நின்ற சேவலை நோக்கி; நீ கொடியாகி நமது தேரிலிருந்து கூவுவாயாக என்று பணித்தருளினார். அது கொடியாகி நின்று கூவியது.

இந்திரனாகிய மயில்வாகனத்திலிருந்து இறங்கிய ஆறுமுகக் கடவுள் மெய்யுணர்வு பெற்று நின்ற சூரனாகிய மயில்மீதேறி அதைப் பூமியெங்கும் திசையெங்கும் வானமெங்கும் செலுத்தினார். மயில் ஆரவாரத்தோடு பறந்து சென்றது.

"வெயில்விடும் அநந்த கோடி வெய்யவர் திரண்டொன் றாகி

புயல்தவழ் கடவுள் வானிற் போந்திடு தன்மை யேபோல்

அயிலினை உடைய செவ்வேள் மரகதத் தழகு சான்ற

மயிலிடை வைகி ஊர்ந்தான் மாகமும் திசைகள் முற்றும்."

வெய்யவர் - சூரியர், புயல் - முகில், அயில் - வேல், மாகம் - ஆகாயம்.

திக்கெங்கும் உலாப்போந்த குமரக்கடவுள் திரும்பவும் மகேந்திரபுரத்திலுள்ள போர்க்களத்துக்குச் சென்றார். புள்ளி மயிலாகவும் சேவலாகவும் நின்ற இந்திரனையும் அக்கினி தேவனையும் அவர்களது பழைய வடிவங்களை எடுக்குமாறு பணித்தார். அவர்கள் தொன்மைபோல் உருவெடுத்து முருகப்பெருமானது பாதங்களில் வீழ்ந்து வணங்கிக் களிபேருவகை கொண்டனர்.

"வீசுறு சுடர்வேல் ஐயன் வெய்யசூர் முதலைச் சாடித்

தேசுறு மஞ்ஞை ஊர்ந்து வந்தது தெரிந்து போர்செய்

காசினி யிடையே நின்ற கணங்களும் வீரர் யாரும்

ஆசறும் இளவலுஞ் சென்ற டிதொழு தார்த்துச் சூழ்ந்தார்."

காசினி - பூமி, போர் செய் காசினி - யுத்தகளம்.

தேவர்கள் சூரசங்காரஞ் செய்த முருகப்பெருமானைப் போற்றிப் புகழ்ந்து துதித்தனர். பதுமகோமளை தன் கணவன் இறந்தானெனக் கேட்டதும் உயிர்துறந்தாள். மற்றைய மனைவியர் தீக்குளித்திறந்தனர்.

"மான்கி ளர்ந்தன அரிமதர் மழைக்கண் மெல்லிய ரெல்லாம்

வான்கி ளர்ந்தெழு கின்றதோர் மாபெருஞ் கனலூடே

கான்கி ளர்ந்திட மலர்தருந் தாமரைக் கானத்தில்

தேன்கி ளர்ந்துதம் மினத்தொடும் புகுந்தெனச் செல்லுற்றார்."

மெல்லியர் - பெண்கள், கனல் - நெருப்பு, கான் - வாசனை, கானம் - காடு, தேன் - தேன்வண்டு.

அசுரகுலம் மாத்திரமல்ல, வீரமகேந்திரமும் அழிந்தது. சிவனுக்குச் சங்கரன் என்றொரு பெயருண்டு. சங்கரன் - சுகஞ்செய்பவன். அவன் முருகப்பெருமானைத் தோற்றுவித்து, சூரனைச் சங்காரஞ் செய்தான். சூரன் கதியடைந்தான். அதனால் சங்காரத் தொழிலும் அருட்செயலே என்பதை உணர்த்துகின்றது சூரசங்காரம்.

"துய்யதோர் மறைகளாலுந் துதித்திடற் கரிய செவ்வேள்

செய்யபே ரடிகள்வாழ்க சேவலும் மயிலும் வாழ்க

வெய்யசூர் மார்புகீண்ட வேற்படை வாழ்க அன்னான்

பொய்யில் சீரடியார்வாழ்க வாழ்க இப்புவன மெல்லாம்."

*******



Printed by: **Luxmi Printer** - 195, Wolfendhal Street, Colombo-13. Tel: 448545, 458273, 473533 Fax: 330588